கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
8-7-1973
30 காசு






12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக் கணக்கை தாமே நடத்தலாம்.


உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்



கோகுலம்

மலர் 2 :: இதழ் 7
ஜூலை 8, 1973
பிரமாதீச, ஆனி 24





அட்டையில் நீச்சலடிக்கும் சிறுவன் :

நீச்சல் குளத்தில் நீர் இருக்கு.
நீருக்குள்ளே நான் இருக்கேன்!

வண்ணப்படம் : ஹரிகோபால்

சந்தா விவரம் :
ஒரு வருடம் ரூ. 7-00
ஆறு மாதம் ரூ. 3-50
நிர்வாகி, கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை-600031



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

பலராமர் திருமணம்

ஆதிசேடனது அவதாரமாகிய பலராமர், ஒப்பற்ற ஆற்றலும் ஏற்றமும் தோற்றமும் படைத்து விளங்கினார்.

ஆனந்த தேசத்தின் அதிபனாகிய வைரகரனுக்கு அவன் தவத்தினாலும் பிரமதேவருடைய அருளினாலும் ஓர் அழகிய பெண் பிறந்தாள். அவளுக்கு ரேவதி என்று பெயர் சூட்டினார்கள். அவள் முழு நிலாவைப்போல் எழிலின் இருப்பிடமாய், கல்வியின் கருவூலமாய் விளங்கினாள். அம்மன்னன் பலராமருடைய பெருமையை அறிந்து தன் அருமைப் புதல்வியாகிய ரேவதியைப் பலராமருக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

பலராமருக்கும் ரேவதிக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பலராமர் ரேவதியுடன் கருத்து ஒருமித்து வாழ்ந்தார்.

உருக்குமணி அவதாரம்

விதர்ப்ப தேசம் மிகவும் வளமையானது. அதன் தலைநகரம் குண்டினபுரம். அறநெறி வழுவாது. அந்நகரில் பீஷ்மகன் என்ற மன்னன் அரசு புரிந்து வந்தான். உருக்குமி, உருக்குமிதரன், உருக்குமீபாகு, உருக்குமீகேசி, உருக்குமீநேத்திரன் என்று ஐந்து புதல்வர்கள் அவனுக்குப் பிறந்தார்கள்.

இலக்குமியின் அம்சமாக உருக்குமணி என்ற பெண் பிறந்தாள். அவள் அழகின் சிகரமாக விளங்கினாள். சகல கலைகளையும் கற்று அறிவின் வடிவாய்த் திகழ்ந்தாள்.

அங்கு வருபவர்கள் கண்ணபிரானுடைய அருமை பெருமைகளை அடிக்கடி கூறுவார்கள். உருக்குமணி அதனைக் கேட்டுக் கண்ணபிரானுடைய திருவடிகளில் மனத்தைச் செலுத்தி, அவரையே கணவராக வரித்துத் தியானம் செய்து கொண்டிருந்தாள்.

உருக்குமணியின் கருத்தை அறிந்த தாய் தந்தையர்கள் அவளைக் கண்ணபிரானுக்கே திருமணம் செய்து தர வேண்டும் என்று கருதியிருந்தார்கள். உருக்குமணி தேவியின் பண்பு, மாண்பு, அறிவு, அழகு, அன்பு முதலிய குண நலன்களையும் பலரால் கேள்வியுற்ற கோபால கிருஷ்ணர் அவளே தனக்குகந்த நாயகியென்று திருவுளஞ் செய்து, திருமணத்துக்குரிய காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

பீஷ்மக மன்னனின் மூத்த மகனும் உருக்குமணியின் அண்ணனுமாகிய உருக்குமி யென்பான் நற்குணம் இல்லாதவன். அவன் தன் தங்கை ருக்குமணியைச் சேதிநாட்டு மன்னனாகிய சிசுபாலனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று உறுதியுடன் திட்டம் இட்டிருந்தான்.

மகனுடன் எதிர்த்துப் பேசமாட்டாதவனாய்ப் பீஷ்மகன் துணிவு இன்றித் தவித்தான்.

உருக்குமணி தேவிக்குச் சுயம்வரம் என்று எல்லா அரசர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. தாமரையின் தேனை நாடி வண்டினங்கள் வந்து சேருவது போல் அரசர்கள் குண்டினபுரத்தை நாடி வரத் தொடங்கினார்கள்.

இதனை அறிந்த உருக்குமணி உள்ளம் உலைந்து வருந்தினாள். ஒரு முதிய வேதியரை அழைத்து அவரை வணங்கினாள். ''வேதவித்தகரே! உமக்கு ஒரு கோடி வணக்கங்கள். இது துவாரகா நாதனாகிய எம்பெருமானுக்கு எழுதிய விண்ணப்பம். இதனை நீர் இரகசியமாய்க் கொண்டு போய் யதுகுல திலகர் மகிழ்ச்சியாக இருக்கும் போது கொடுத்து அவருக்கு என் வணக்கத்தைக் கூறும். அவர் சுயம்வர விழாவில் வந்து அடியேனுக்கு மாலையிட்டு அருள் புரியுமாறு செய்யும். போய் வாரும்'' என்றாள்.

வேதியர் புன்னகை பூத்து, ''அம்மா! இந்த மங்கல காரியத்தை நான் அவசியம் செய்வேன் : நீ வருந்தற்க'' என்று கூறி உருக்குமணியிடம் விடைபெற்றுத் துவாரகையை நாடிப் புறப்பட்டார். துவாரகையை அடைந்தார்.

கண்ணபிரான் அவரை அன்புடன் வரவேற்று, இன்னுரை கூறி, இனிய

பாலும் கனியமுதமும் தந்து உபசரித்தார்.

கண்ணபிரானுடைய அன்பையும் அவருடைய அழகையும் கண்ட மறையவர் நிறை மனத்துடன் மகிழ்ச்சியடைந்தார். உருக்குமணி தேவியின் கடிதத்தை நீட்டினார்.

கருணையே வடிவாய கமலக்கண்ணரே!

பலகோடி வணக்கங்கள்.

தங்கள் திருவடியின் தியானத்தால் உள்ளம் உவகையுறுகின்றேன். தங்களையே என் பதியாக வரித்திருக்கின்றேன். பெண் சிங்கத்தைக் குறுநரியாகிய சிசுபாலனுக்குத் தர என் அண்ணன் முயல்லுகின்றான். ஞானமூர்த்தியே! யதுகுலம் தழைக்க வந்த மாதவமணியே! சுயம்வரத்தன்று அடியாள் உமாதேவியை வழிபடும் பொருட்டுப் பார்வதியம்மையின் திருக்கோயிலுக்கு வருவேன். அங்கு தேவரீர் வந்து என்னைக் கைப்பிடித்துக் கொண்டு கருணை புரியுமாறு வேண்டுகின்றேன். தாங்கள் அங்கு வரவில்லையேல் என் உயிர் உடம்பை விட்டுப் பிரிந்து விடும். உமது பாதார விந்தத்தை ஆதாரமாக நினைத்து உருகுகின்றேன்.

தங்கள் அடிமை

உருக்குமணி

இக் கடிதத்தைக் கண்ணபிரான் திருக்கண் சாத்தியருளினார். "உருக்குமணி என் உள்ளத்தை உண்மையில் உருக்குமணியாகத் திகழ்கின்றாள். அவள் விருப்பப்படியே அவளை நான் அடைவேன்" என்று கூறியருளினார். இதனைத் தமது திருத்தமையனாகிய பலதேவனிடம் கூறி அவருடைய அனுமதியும் பெற்றுக் கொண்டு புறப்பட்டார். ஆடை அணிகலன்களால் தம்மை அலங்கரித்துக் கொண்டார்.

தாருகன் என்ற சாரதி சைனியம், சுக்ரீவம், மேகபுஷ்பம், வலாஹம் என்ற பேர்களையுடைய நான்கு சிறந்த குதிரைகளைத் தேரில் பூட்டித் தேரை அலங்கரித்தான்.

பகவான், "தீக்கடைக்கோலைக் கடைந்து நெருப்பை எடுப்பது போல், சுயம்வரத்துக்கு வந்துள்ள சிசுபாலன் முதலியோர்களையும் வென்று என்னையே விழையும் உருக்குமணியை நான் அடைவேன்" என்று கூறி, அந்த அந்தணரையும் தேரில் ஏற்றிக்கொண்டு இளஞ் சூரியனைப் போல் ஒளி செய்து கொண்டு விதர்ப்ப தேசத்தை அடைந்தார்.

(தொடரும்)



அன்னப் பறவை அழகி

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் நாடு செழிப்பாக இருந்தது. மக்கள் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். ஆனால் மன்னன் மட்டும் சோகமே வடிவாக இருந்தான். ஏன் தெரியுமா? அவனுக்குப் பின் அந்த நாட்டை ஆள ஒரு மகன் பிறக்கவில்லை அந்த மன்னனுக்கு. இதனால் மனமுடைந்த மன்னன் ஒரு நாள் ராணியிடம் சொல்லிக் கொண்டு தேச சஞ்சாரம் செய்யக் கிளம்பினான். பல இடங்களைப் பார்க்கும்போது பிள்ளை இல்லாக் குறையினால் ஏற்பட்ட வேதனை குறையும் என்று எண்ணினான் அவன்.

மன்னன் பல நாட்கள் பிரயாணம் செய்தான். பற்பல நாடுகளைக் கண்டான். ஒரு நாள் ஒரு மலையடிவாரத்திலிருந்த குளிர்ந்த நீரோடையின் அருகே அமர்ந்திருந்தான். சலசலத்து ஓடும் தெள்ளிய நீர், 'என்னைக் குடி' என்று கண் சிமிட்டுவது போலிருந்தது. மன்னன் ஆவலோடு குனிந்து ஓடும் நீரை அப்படியே வாயால் உறிஞ்சிக் குடிக்கலானான். தாகம் தீர்ந்து தலையை நிமிர்த்த முற்பட்டபோது முடியவில்லை. நீருக்குள்ளிருந்து யாரோ — ஏதோ ஒரு சக்தி — அவனது நீண்ட தாடியைப் பிடித்து இழுப்பது போலிருந்தது. திகைத்துத் திணறிப்போனான் மன்னன்.

''நான்தான் கோஸ்ட்டி. பாதாள உலகின் மன்னன்'' என்றது ஒரு குரல். நீருக்குள்ளிருந்து ஒரு சின்ன முகம் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான் நில மன்னன். அதற்குப் பச்சைக் கண்கள். பெரிய தலை. அதில் ஒரு கொம்பு. கத்தி போன்ற மூக்கு. ''நான் கேட்பதைத் தருவதாகக் கூறினாலொழிய உன் தாடியை நான் விடமாட்டேன்'' என்றது அந்த உருவம்.

''என்ன கேட்கப் போகிறாய்?'' என்றான் மன்னன்.

'' உன் உயிருக்கும் மேலாக நேசிக்கும் ஒரு பொருளை எனக்குத் தருவதாக நீ வாக்களிக்க வேண்டும். அது நீ அரண்மனையை விட்டுக் கிளம்பும்போது இல்லாத பொருளாகவும் இருக்க வேண்டும்'' என்றான் பாதாள உலக மன்னன்.

தாடி சிக்குண்ட வேதனை தாங்காத மன்னன் அதிலிருந்து விடுபட எதையும் தருவதற்குத் தயாராக இருந்தான். ஒப்புதல் அளிக்கவும் தாடியும் விடுபட்டது. ''நான் உயிருக்கும் மேலாக நேசிப்பவள் என் மனைவிதான். ஆனால் நான் கிளம்பும்போது அவள்தான் அரண்மனையில் இருந்தாளே!'' என்று தாடியைத் தடவியபடியே சிந்திக்கலானான் மன்னன். ஓடை நீரில் தோன்றிய மாய உருவம் மறைந்தது. அது கேட்டதை எண்ணியபடியே நாட்டுக்குத் திரும்பினான் மன்னன். ஊரை விட்டுக் கிளம்பி எட்டு மாதங்களாகியிருந்தன.

ஊர் விழாக் கோலம் பூண்டிருக்கக் கண்ட மன்னனுக்கு வியப்பான வியப்பு. அரண்மனைக்குப் போன போதுதான் விஷயம் புரிந்தது. அவனுக்கு ஓர் அழகிய மகன் பிறந்திருந்தான். அரசி மகிழ்ச்சியோடு தங்கள் அருமை மகனைக் கொண்டு வந்து காட்டினாள் மன்னனிடம். அப்போதுதான் அந்தப் பாதாள உலகப் பாவி போட்ட நிபந்தனையின் காரணம் புரிந்தது மன்னனுக்கு. அவன் மிக மிக விரும்பியது மகனைத்தானே? அது அவன் அரண்மனையில் இல்லாத காலத்தில் பிறந்திருக்கிறது. ''கிளம்பும்போது என் அருமை மனைவி கருவுற்றிருந்தது தெரியாமல் போயிற்றே'' என்று கலங்கினான் மன்னன். மகன் பிறந்ததினால் மகிழவேண்டிய மன்னன் கவலையில் ஆழ்ந்தான்.





வருடங்கள் உருண்டன. இளவரசன் வளர்ந்து பெரியவனானான். பாதாள உலக மன்னன் கோஸ்ட்டி வரவில்லை. 'ஆண்டவனே! அவன் வந்துவிடக் கூடாது' என்று வேண்டிக் கொண்டிருந்தான் மண்ணுலக மன்னன்.


ஆனால்......

வாலிப வயதடைந்த இளவரசன் ஒரு நாள் வேட்டையாடக் காட்டுக்குப் போனான். அங்கே ஒரு விசித்திரமான கிழவனைச் சந்தித்தான். அவனுக்குப் பெரிய தலை. பச்சைக் கண்கள். தலையில் கொம்பு. குள்ளனைப் போல் இருந்த அவன், ''இளவரசே! நீ எனக்கு உரிமையானவன். உன் அப்பாவிடம் போய்ச் சொல்லு. நிபந்தனையை நிறைவேற்ற வேண்டிய சமயம் வந்துவிட்டது என்று. உன் அப்பா கொடுத்த வாக்குத் தவறுவாரானால் அதன் பிறகு என்ன நடக்கும் என்று சொல்லுவதற்கில்லை'' என்று சொல்லிவிட்டு மறைந்து போனான்.

இளவரசன் அரண்மனைக்கு வந்ததும் அப்பாவிடம் காட்டில் நடந்ததைக் கூறினான். அவன் பிறப்பதற்கு முன் நடந்த நிகழ்ச்சிகளை மகனிடம் கூறிக் கண் கலங்கினான் அரசன்.

''வருத்தப்படாதீர்கள், அப்பா! அந்தக் கோஸ்ட்டிக்கு என் மீதுள்ள உரிமையை எப்படியாவது பறித்துக் கொண்டு நான் திரும்பி வருகிறேன்'' என்று கூறிக் கிளம்பினான். அரசர் தம் மகனுக்கு அழகான ஒரு வெள்ளைக் குதிரையைக் கொடுத்தார். அம்மாவோ தம் அருமை மகனுக்குத் தங்கச் சங்கிலியில் கோத்ததொரு சிலுவையைக் கழுத்தில் அணிவித்து முத்தமிட்டு வழி அனுப்பினாள்.

பிரயாணம் கிளம்பி மூன்றாம் நாள் மாலையில் இளவரசன் ஒரு கடற்கரை அருகே வந்தான். அங்கே கரையில் வெள்ளை வெளேர் என்று பன்னிரண்டு ஆடைகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. ஆனால் அவைகளுக்குரியவர்கள் யாரையும் அங்கு காணோம். இளவரசன் அவைகளில் ஓர் ஆடையை எடுத்துக் கொண்டு அருகிலிருந்த ஒரு புதரின் பின்னால் போய் மறைந்து கொண்டான். சற்று நேரத்துக்கெல்லாம் பன்னிரண்டு அன்னப் பறவைகள் அங்கு வந்தன. தங்கள் காலால் தரையில் தட்டவே பன்னிரண்டு அழகிய அரச குமாரிகளாக மாறின. அரச குமாரிகள் அங்கிருந்த உடைகளை அணிந்து கொண்டு தரையைக் காலால் உதைக்கவே அடுத்த விநாடி ஒவ்வொருவராக மறைந்துபோனார்கள் பூமிக்குள்.



ஆனால் ஒரே ஒரு ராஜகுமாரி மட்டும் கடற்கரையில் நடுங்கியபடி அழுது கொண்டு நின்றாள். அவளுடைய ஆடையைத்தான் இளவரசன் எடுத்து வைத்துக் கொண்டு புதரின் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தான். ''இளவரசே! என் ஆடையைக் கொடுத்துவிடு. நான் உனக்குப் பல நன்மைகளைச் செய்வேன்'' என்று வேண்டினாள் அந்த அழகி. இளவரசனும் மனமிரங்கி அவளது ஆடையைத் தர, அதை அணிந்து கொண்ட அவள், ''மிக்க நன்றி இளவரசே! நாங்கள் 'கோஸ்ட்டி'

மன்னரின் குமாரிகள். பாதாள உலகின் அரசர் அவர். என்னோடு வாருங்கள். என் தந்தைக்கு அடிமைப்பட்டுள்ள உங்களை என்னால் விடுவிக்க முடியும் என்று நம்புகிறேன்'' என்றாள் அந்த அரசகுமாரி. இளவரசனைக் கண்டதுமே அவன் அழகில் மனத்தைப் பறிகொடுத்துவிட்டாள் பாதாள உலக இளவரசி.

இளவரசனைப் பாதாள உலகத்துக்கு அழைத்துப் போனாள். கோஸ்ட்டியின் முன்னால் மண்டியிட்டு வணங்கினான் இளவரசன். விநோதமாகச் சிரித்த பாதாள மன்னன், ''நீ என்னுடையவன். உன்னை நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். நான் சொல்லும் மூன்று காரியங்களை நீ செய்துவிட்டால் உயிர் பிழைக்கலாம். இல்லாவிடில் உன்னைக் கொன்றுவிடப் போகிறேன்'' என்றான்.

''காரியங்களைக் கூறுங்கள்'' என்றான் இளவரசன்.

''முதலில் நவரத்தினங்களால் ஒரு அரண்மனையைக் கட்ட வேண்டும். இரண்டாவதாக என்னுடைய பன்னிரண்டு குமாரிகளில் யார் கடைசிப் பெண் என்பதைக் கூற வேண்டும். பன்னிரண்டு பேரும் ஒரே மாதிரி இருப்பார்கள். அவர்களது அம்மாவினால்கூட யார் இளையவள் என்பதை உணர முடியாது. மூன்றாவது ஏதுமே இல்லாமல் ஒரு ஜோடிக் காலணிகளைத் தயாரித்துக் கொடுக்க வேண்டும்'' என்று விவரித்தான் கோஸ்ட்டி.

இளவரசனிடம் காதல் கொண்ட இளவரசி தன் தந்தையின் நிபந்தனைகளுக்கு அவனுக்கு உதவினாள். கடலில் உள்ள மீன்களுக்கெல்லாம் ஆணையிட்டு நவரத்தின மாளிகையைக் கட்டுவித்தாள். இரண்டாவது நிபந்தனை மிகச் சுலபம். அவன் மீது காதல் கொண்ட அவளே எல்லாரிலும் இளையவள். ஆனால் மூன்றாவது நிபந்தனைக்கு அவளாலும் அவனுக்கு உதவ முடியவில்லை. ஆகவே தன் காதலனுடன் அங்கிருந்து தப்பி ஓடிவிடத் திட்டமிட்டாள் அன்னப் பறவை அழகி.

இளவரசனின் வெள்ளைக் குதிரை மீதேறி இருவரும் தப்பி ஓடினார்கள். தன் தந்தையின் நாட்டை நோக்கி விரட்டினான் குதிரையை இளவரசன். போகும் வழியில் இளவரசி கத்தினாள். ''பின்னால் குதிரைகளின் குளம்பொலியைக் கேட்கிறேன். அது என் தந்தையும் அவரது படைகளுடையதுமாகத்தான் இருக்கும். அவரது பலம் எல்லாம் அவர் சந்திக்கும் முதல் மாதா கோயில் வரைதான். ஆகவே, சீக்கிரம் ஒரு மாதா கோயிலை நோக்கி விரட்டுங்கள் உங்கள் குதிரையை'' என்றாள்.

''ஆனால் மாதாகோவில் வெகுதூரத்துக்கப்பால் அல்லவா இருக்கிறது!'' என்று கலங்கினான் இளவரசன்.

''அப்படியானால் நாம் தந்திரத்தாலும் மந்திரத்தாலும்தான் அவரை வெற்றி கொள்ள வேண்டும்'' என்ற அவளுக்குத் தன் காதலனின் கழுத்தில் தொங்கும் சிலுவையைக் கண்டதும் ஒரு யோசனை தோன்றியது.

''உங்கள் கழுத்தில் உள்ள தங்கச் சிலுவையைக் கொடுங்கள்'' என்று கேட்டு வாங்கிக் கொண்டாள். குதிரையை ஒரு மாதா கோயிலாக மாற்றினாள். அதன் கோபுரமாகவும் அதன் மீது ஒளிவிடும் சிலுவையாகவும் தான் மாறினாள். இளவரசனை மத குருவாக்கினாள். இவர்கள் இப்படி மாறுவதற்கும் அங்கு கோஸ்ட்டி தம் படையுடன் வருவதற்கும் சரியாக இருந்தது. ''மத குருவே வணக்கங்கள். குதிரை மீது யாராவது வழிப்போக்கர் இப்படிப் போனதைக் கண்டீர்களா?'' என்று கேட்டான்.

''ஆமாம், ஓர் இளவரசனும் இளவரசியும் என்று நினைக்கிறேன். வெள்ளைக் குதிரைமீது வந்து இறங்கினார்கள். தங்களைக் கணவன் மனைவியாக்கி வாழ்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இதோ இங்குதான் மண்டியிட்டு என் முன் உட்கார்ந்த அவர்களைத் தம்பதிகளாக்கி அனுப்பினேன். சற்று முன்புதான் குதிரை மீது இந்தப் பக்கமாகப் போனார்கள்'' என்றார் மதகுரு. பாதாள உலக மாயாவியான கோஸ்ட்டியின் முகம் வாடியது. ''ம்.... நான் காலங் கடந்து வந்துவிட்டேன். காரியம் மிஞ்சிவிட்டது'' என்று கூறியபடி பூமியை உதைத்தான். அது பிளந்து வழிவிட அகனுள் புகுந்து மறைந்து போனான்.

அதன் பிறகு? சொல்லவா வேண்டும். மாதாக் கோயில் மறைந்தது. அங்கு அன்னப் பறவை அழகியும் வெள்ளைக் குதிரையும் இளவரசனும் தோன்றினர். குதிரை மீதேறிக் கொண்டு ஒரு மாதாக் கோயிலுக்குப் போனார்கள். அங்குள்ள மத குருவின் முன்னிலையில் நிஜமாகவே கணவனும் மனைவியுமாக ஆனார்கள். கவலையோடு இருக்கும் தன் அப்பாவின் முன்னால் போய் அழகு மனைவியோடு நின்றான் இளவரசன். மகனை அணைத்துக் கொண்டார் மன்னர். மருமகளை அழைத்துக் கொண்டாள் மகாராணி. எல்லோரும் சந்தோஷமாக நீண்ட நெடுங் காலம் வாழ்ந்து வந்தார்கள்.

— கிருஷ்ணவேணி



"உன்னே நல்லாப் பாருங்க உலகம் தெரியுதா சொல்லுங்க!"

புகைப்படம்: லக்ஷ்மி ராஜரத்தினம்

"பந்தைக் கீழே போட்டால் யாராவது தூக்கிக்கிட்டுப் போயிடுவாங்களோ?"

புகைப்படம்: ஆர். சேகர்



இந்த அடையாறு ஆலமரத்துக்கு அடி மரம் எங்கே இருக்கு?

புகைப்படம்: கே. எஸ். பழனி



புகைப்படம்: ஆர். ஸ்ரீதர்

"எங்க பள்ளிக்கூடத்திலே அட்மிஷன் வேணுமா சார்?"

புகைப்படம்: ஆர். ஹரிகோபால்





பிராணிகளின் வேகம்

சுவாமிநாத காசிநாதன்




உயிருள்ளவைகளுக்கும் உயிரற்ற பொருள்களுக்கும் இடையே முக்கியமான வித்தியாசம் என்னவென்றால் நகருகின்ற தன்மை. பிராணிகள் இரை தேடுவதற்காகவும் துரத்தி வருகின்ற எதிரிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவும் நகர வேண்டியது அவசியமாகிறது. வாழ்கின்ற சூழ்நிலைக்கு ஏற்பவும், எதிரிகளுக்குத் தக்கவாறும் பிராணிகள் ஓடியோ, நீந்தியோ, பறந்தோ தம்மைக் காத்துக் கொள்கின்றன. இந்த நகருகின்ற சக்திக்கு ஏற்றவாறு அவற்றின் உடலமைப்பு மாறுபடுகிறது.

இவ்வுலகத்திலேயே எந்தப் பிராணி வேகமாகப் போகிறதென்றால், பூச்சிகள் என்று அறிய ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? உலகத்திலேயே அதி வேகமாகச் செல்லும், ஜெட் விமானத்தை மீறிப் பறக்கக் கூடியவை சில பூச்சிகள். அப்படிப் பறக்கும் அந்த ''மான்பாட்'' பூச்சி ஒரு மணிக்கு 818 மைல் வீதம் பறக்கிறது. இவைகள் தென் அமெரிக்காவில் வசிக்கின்றன. இவை உலகத்தையே பதினேழு மணி நேரத்தில் சுற்றி வரும் ஆற்றல் உடையன. இவை சப்தத்தைக் காட்டிலும் அதிவேகமாகப் பறக்கின்றது என்பதை நாம் இதிலிருந்து அறிகிறோம். ஆனால் இதற்கு முற்றிலும் மாறுபாடாக, நத்தையோ மணிக்கு 25 அங்குலம் ஊர்ந்து செல்கின்றது. இந்த இரண்டு வேகத்திற்கும் மத்தியில் பல பிராணிகளின் வேகம் அமைந்துள்ளது. பந்தயக் குதிரைகள், வேட்டையாடும் நாய்கள், புறாக்களைத் தவிர மற்ற பிராணிகளின் வேகம் நம் மனத்தை அவ்வளவாகக் கவர ல்லை. மோட்டார் வண்டிகளும் ஆகாய விமானமும் கண்டு பிடிக்கப் பட்ட பிறகு பல்வேறு பிராணிகளின் வேகம் என்ன என்பதைச் சரியாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இந்தியா, ஆப்பிரிக்கா தேசங்களில் வாழும் சிறுத்தைப் புலி ஒரு நிமிடத் துக்கு ஒரு மைல் வேகம் பாய்ந்து செல் கிறது. தான் அடித்துச் சாப்பிடுகிற கெஸல்லி (மான்) போன்ற மிருகத்தின் வேகத்தை விட மணிக்கு 10 மைல் அதிகமாகப் பாய்ந்து செல்கிறது இது. அவைகள் வேகமாகப் பாய்ந்து கிளம்பி இரண்டே விநாடிகளில் மணிக்கு 45 மைல் வேகத்தை எட்டுகின்றன. ஆகை யால் இவற்றின் குறிப்பிலிருந்து எந்த மிருகமும் தப்பிச் செல்ல முடியாது. இந்தச் சிறுத்தைகள் ''ஆண்டிலோப்'' என்ற மிருகத்தை அடித்து விரும்பிச் சாப் பிடுகின்றன. ஆண்டிலோப் மைலுக்கு 30 மைல் வேகம்தான் செல்ல முடிய மாதலால் சிறுத்தைப் புலியிடமிருந்து அவை தப்பிச் செல்ல முடியாது.

முயல்களும் துரத்தப்பட்டால் வேக மாகச் செல்லும் ஆற்றலை உடையன. ஒரு முயலைக் காரில் துரத்திச் சென்ற பொழுது மணிக்கு 34 மைல் வேகத்தில் ஓடியதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஒட்டைச் சிவிங்கி, நெருப்புக்கோழி, கேப் எருமை போன்ற மிருகங்கள் மைலுக்கு 35 மைல் வேகம் செல் கின்றன என்று விஞ்ஞான வாயிலாக அறிகிறோம். யானை, காண்டா மிருகம் போன்ற மிருகங்களை யாராவது சீண் டினால் இவைகளும் மணிக்கு 25 மைல்





வேகத்தில் துரத்தும் ஆற்றல் உடையன. ஆனால் இதே வேகத்தில் வெகு தூரம் அவற்றால் ஓட முடியாது. சற்று நேரத்துக்குப் பிறகு வழக்கமான மணிக்கு 2 மைல் வேகத்தில் நடக்க ஆரம்பித்து விடுகின்றன.

மனிதனை விடக் குதிரை வேகமாக ஓடுகிறது என்பது நமக்குத் தெரியும். இவை 220 கெஜத்தை 11 விநாடிகளில் கடக்கவல்லவை. நரிகள் ஓநாயினால் துரத்தப்படும்போது 40 மைல் வேகத்தில் செல்லுகின்றன. கங்காரு தன் பெரிய சரீரத்தை வைத்துக் கொண்டு பின் காலினால் உந்தி நடப்பதைப் பார்க்க வேடிக்கையாக இருக்கிறது. ஆனால் இவை குதிரைகளைக் காட்டிலும் வேகமாகச் செல்லக் கூடியவை.

வரிக் குதிரை, ஆன்டிலோப் என்ற மிருகத்தைப் போலவே வேகமாக ஓடக் கூடியது. ஆஸ்திரேலியாவின் ''எமு'' என்ற பறவை நெருப்புக் கோழியைப் போல் நடக்கும் இனத்தைச் சேர்ந்தது. இதனால் பறக்க முடியாவிட்டாலும்கூட, தன் நீண்ட கால்களினால் வேகமாக ஓடக் கூடியது. மணிக்கு 40 மைல் வேகத்தில் செல்லக் கூடிய இந்தப் பறவை மானைப் போல் சீராக அதே வேகத்தில் பல மைல்கள் ஓடும்.


நவீன விஞ்ஞான உதவி கொண்டு பறவைகளின் வேகங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பட்டியலின் நீளம் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. பருந்தின் வேகத்தை அனைவரும் அறிவர். அது மணிக்கு 110 மைல் வேகம் பறந்து செல்கிறது. ''ஃபால்கன்'' என்ற கழுகு 65 மைல் வேகத்தில் பறக்கிறது. ''ஸ்வாலோ'' என்ற பறவையை காரில் ஏற்றிச் சென்று 80 மைலுக்கு அப்பால் விடுவித்தபோது தன் இருப்பிடத்துக்கு 44 நிமிடத்தில் திரும்பி வந்து சேர்ந்தது. அதன் வேகம் மணிக்கு 110 மைல்.

நீர்மூழ்கிக் கப்பல் கண்டு பிடித்த பிறகு ஆழ்கடலின் அடியில் வாழும் பலவித மீன்களின் வேகத்தைக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஆயிரம் பவுண்டு எடையுள்ள ராட்சஸ ''மாக்ரல்'' என்ற மீன் மணிக்கு 35 மைல் வேகத்தில் நீந்தக் கூடியது. ஸால்மன் மீன் 25 மைல் வேகத்திலும் ஈல் என்ற மீன் 15 மைல் வேகத்திலும் செல்லக் கூடியது.

மரத்தில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும் ''ஸ்லாத்'' என்ற ஒரு பாலூட்டிப் பிராணி தென் அமெரிக்காவில் வசிக்கின்றது. அது நிமிடத்துக்கு 14 அடி நடக்கக் கூடியது. ஆனால் ஆகாரம் தேடும் பொருட்டு அமேஸான் நதியின் ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்குச் செல்லும்போது மணிக்கு 2 மைல் வேகத்தில் நீந்திச் செல்லக் கூடியது.

இவ்வாறு வேகமாகச் செல்வதற்கு பிராணிகளுக்குச் சக்தி தேவை. அந்தச் சக்தியை உண்ணும் ஆகாரத்திலிருந்து தான் பெற்றுக் கொள்கின்றன. ஆகையால் வேகமாகச் செல்லும் மிருகங்கள் உணவை அதிகம் உட்கொள்ளும் ஆற்றலை உடையன. பொதுவாக, வாழும் இயற்கைச் சுற்றுப்புறம் உஷ்ணமாக இருந்தால், பிராணிகள் வேகமாகச் செல்கின்றன என்று தெரிகிறது.





மூன்று சகோதரர்கள்

சுந்தர்

ஒரு காட்டில் மூன்று சகோதரர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் மிகவும் ஏழை. தங்களுடையது என்று சொல்வதற்கு ஒரே ஒரு மாமரம்தான் அவர்களுக்கு இருந்தது. அவர்களுடைய சிறு குடிசைக்கு வெளியே அந்த மரம் இருந்தது. அவர்களுக்கு அந்த மரத்தின்மேல் ரொம்பப் பிரியம். மரம் காய்க்க ஆரம்பித்ததும், அவர்கள் முறை வைத்துக் கொண்டு அதைக் காவல் காப்பார்கள். எப்போது பார்த்தாலும் மூன்று சகோதரர்களில் ஒருவன் மரத்தடியில் காவல் இருப்பான். மற்ற இருவரும் வயலில் வேலை செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் இப்படி இடைவிடாமல் உழைத்தும் அவர்களுக்கு வயிறு நிரம்பச் சாப்பிடுவதற்குக் கூடத் திண்டாட்டமாய் இருந்தது.

ஒருநாள் ஒரு தேவதை அவ்வழியே போனாள். இந்த மூன்று சகோதரர்களையும் பார்த்து அவளுக்கு இரக்கம் உண்டாயிற்று. இவர்களுக்கு எவ்வகையிலாவது உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தாள்.

அவள் ஒரு கிழவிபோல் உருமாறி நொண்டிக் கொண்டே மாமரத்தருகே வந்தாள். அப்போது மூத்த சகோதரன் காவல் இருந்தான். மூதாட்டி அவனிடம் ''எனக்கு மாங்காய் வேண்டும்'' என்று கேட்டாள்.

அவன் உடனே சில மாங்காய்களைப் பறித்து, ''இந்தக் காய்கள் அத்தனையும் என் பங்குக்கு உரியவை. இவற்றை நீ எடுத்துக் கொண்டு போ. இதற்கு மேல் கொடுக்க எனக்கு உரிமை இல்லை. ஏனென்றால் பாக்கி இருப்பவை என் சகோதரர்களுக்குச் சொந்தம்'' என்று கூறினான்.

அந்த மூதாட்டி அவற்றை எடுத்துக் கொண்டு அவனை வாயார வாழ்த்தி விட்டுப் போய்விட்டாள்.

மறுநாள் இரண்டாவது சகோதரன் காவல் இருந்தான். இரக்கம் மிகுந்த அந்தத் தேவதை மறுபடியும் மூதாட்டி உருவத்தில் அங்கு வந்து, முந்திய நாள் போலவே கொஞ்சம் மாங்காய் வேண்டுமென்று கேட்டாள். அவனும் தந்தான். அடுத்த நாள் மூன்றாவது சகோதரனிடமும் அவ்வாறே நடந்தது.

இதற்கு மறுநாள் மூன்று சகோதரர்களும் வயலுக்குப் போக ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோது, அந்தத் தேவதை தன் சுய உருவத்தில் வந்து, அவர்களுக்கு எதிரே உட்கார்ந்தாள். ''குழந்தைகளே! நான் உங்கள் மூன்று பேரையும் தனித் தனியே பரீட்சை செய்தேன். மூன்று பேரும் நல்லவர்களாக இருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி. நான் இப்பொழுது உங்களை ஒரு காட்டுக்கு அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறி அவர்களை அழைத்துக் கொண்டு சென்றாள். வெகு தூரம் நடந்து அவர்கள் ஒரு சமவெளிப் பிரதேசத்தை அடைந்தார்கள். அங்கு தேவதை மூத்தவனை அழைத்து, ''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டாள்.

மூத்தவனுக்கு அப்பொழுது தாகம், பசி, களைப்புமாக இருந்ததால், இங்குள்ள அத்தனை மொட்டை மரங்களும் இனிய பேரிக்காய் மரங்களாகி எப்பொழுதும் காய்த்துக் கொண்டும், இங்குள்ள ஆறு இனிய சர்பத்தாக மாறி எப்பொழுதும் பெருகிக்கொண்டும் இருக்க வேண்டும்; அதற்கு நான் சொந்தக்காரன் ஆகவேண்டும்'' என்று சொன்னான்.

தேவதை மந்திரக்கோலை ஆட்டினாள். அவ்வளவுதான்! என்ன ஆச்சரியம்! அவன் கூறியபடியே மாறி விட்டது. பிறகு தேவதை 'இதனைச் சரியானபடி உபயோகிக்க வேண்டியது உன் கடமை' என்று சொல்லிவிட்டு மற்ற இரண்டு சகோதரர்களையும் ஒரு செழுமையான வயலுக்கு அழைத்துச் சென்றாள். அங்கு

தேவதை இரண்டாமவனைப் பார்த்து, ''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டாள்.


அப்போது அவன் உள்ளத்தில் நெடுங் காலமாய் வைத்திருந்த ஆசையினைக் கூறினான்: ''இங்கு பல்லாயிரக்கணக்கான பசுமாடுகள் வரவேண்டும். அந்த மாட்டுப் பண்ணைக்கு என்னையே சொந்தக்காரனாக ஆக்கி விடுங்கள்'' என்று கேட்டான். தேவதையும் மந்திரக் கோலை ஆட்டி, அங்கு ஏராளமான பசு மாடுகளைத் தோற்றுவித்தாள். பின் அவனைப் பார்த்து, ''இதோ பார்! உனக்கு ஒரு குறையும் இருக்காது. நீ சுகமாயிருப்பதோ, கஷ்டப்படுவதோ எல்லாம் நீ நடந்து கொள்வதைப் பொறுத்திருக்கிறது'' என்று கூறின

பிறகு அவள் சின்னவனை அழைத்துக் கொண்டு ஒரு மலை அடிவாரத்தை அடைந்தாள். அங்கே போனதும் அவள், ''உன் விருப்பம் என்ன?'' என்று கேட்டாள்.

சின்னவன் இதற்கு உடனே பதில் சொல்லவில்லை. சிறிது நேரம் யோசனை செய்த பிறகு, நிதானமாக, ''ஓர் அழகிய கெட்டிக்காரியான பெண்ணை நான் மணந்து கொள்ள ஆசைப்படுகிறேன்'' என்று சொன்னான்.

''நீ கேட்டது கஷ்டமான வரம். இருந்தபோதிலும் என்னோடு வா. என்ன செய்யலாம் என்று பார்ப்போம்'' என்றாள் தேவதை.

வெகு நாட்கள் வரையில் அந்தத் தேவதை, சின்னவனைத் தன்னோடு அழைத்துக் கொண்டு சுற்றினாள். இறுதியில் அவர்கள் ஒரு நகரத்தை அடைந்தார்கள். அங்கே ஒரு பெரிய வியாபாரி இருந்தார். தேவதை நேரே வியாபாரியின் மாளிகைக்குப் போய், ''இந்த வியாபாரியின் மகள் ரொம்ப அழகி; நல்லவள் என்று கேள்விப்பட்டேன். அவள் எப்படிப்பட்டவள் என்று நேரில் தெரிந்துகொள்ள வேண்டும். நான் அவளைப் பார்க்கலாமா?'' என்று கேட்டாள்.



தேவதைக்கு அனுமதி கிடைத்துவிட்டது. ஆனால் சின்னவன் மனதில் 'நம்மைப்போன்ற சாதாரண ஆசாமிக்குத் பணக்கார வியாபாரி தன் மகளைக் கல்யாணம் செய்து கொடுப்பாரா?' என்று கலக்கம் உண்டாயிற்று. தேவதை அதை கவனித்துக்கொண்டு அவனுக்குத் தைரியம் சொன்னான். பேசிக்கொண்டே, அவர்கள் மாளிகையின் உள்ளே போனார்கள்.

அங்கே, அந்த வியாபாரியின் குமாரியைக் கல்யாணம் செய்துகொள்ளும் ஆசையுடன் வந்து காத்திருக்கும் எத்தனையோ இளைஞர்களைப் பார்த்தார்கள். அவர்கள் கொண்டு வந்திருந்த பரிசுப் பொருள்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்தவர்களில் இரண்டு பேர் விசேஷ அந்தஸ்து உள்ளவர்களாகத் தென்பட்டார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் மாளிகையில் ஒருவிதப் பரபரப்பு ஏற்பட்டது. எல்லோரும் எழுந்து நின்றார்கள். அப்போது வியாபாரியும் அவரது குமாரியும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்காக மேடையில் சிங்காதனம் போடப்பட்டிருந்தது. குமாரியும் வியாபாரியும் அதில் போய் அமர்ந்தார்கள். வந்திருந்த இளைஞர்கள் வரிசையாய் அமர்ந்து கொண்டார்கள். விசேஷ அந்தஸ்துக்காரர்கள் இரண்டு பேரும் தேவதையோடு வந்த சின்னவனும் முன்னே வரிசையில் நின்றார்கள்.

குமாரி எல்லோரையும் ஒரு முறை பார்த்தாள். எல்லோரையும் விடத் தேவதையோடு வந்த சின்னவனையே அவளுக்குப் பிடித்திருந்தது. அவன் கிழிந்த துணி உடுத்தியிருந்தாலும் நல்ல அழகன், குணசாலி என்பதை எடுத்த எடுப்பிலேயே கண்டுகொண்டாள். மற்றவர்களைக் குமாரிக்குப் பிடிக்கவில்லை. கிழிந்த துணி கட்டியிருக்கும் இளைஞனையே கல்யாணம் செய்துகொள்வேன் என்று அவள் வியாபாரியிடம் சொன்னாள். ஆனால் வியாபாரி மற்றவர்களில் ஒருவனைத் தேர்ந்தெடுக்கும்படி மகளிடம் கூறினான். ஏனென்றால் அவர்கள் எல்லோரும் பணக்காரர்கள். குமாரி அதை விரும்பவில்லை. மகள்மேல் வியாபாரிக்கு மிகவும் பிரியம். அதனால் அவள் விருப்பத்துக்கு மாறாக எதையும் வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் முன் வரிசையில் இருந்த மூவரில் நல்ல குணசாலி யார் என்று எப்படித் தெரிந்து கொள்வதென்று யோசித்தார்.

வியாபாரியின் தயக்கத்தைத் தெரிந்து கொண்ட தேவதை முன்னே

வைகறைப் பொழுது!

நீல வானத்தில் பொன்னொளி பரவியது. வெண்ணிற மேகங்கள் அந்த ஒளியில் செந்நிறம் ஏற்று வண்ணக் கோலம் கொண்டன.

புவியின் மீது இருள் விலகியது. பட்சிகள் கூவின. வயல்வெளியில் பயிர்கள் இளங்காற்றில் மெல்ல அலைந்தன. வைக்கோற்போரின் மீதிருந்து சேவல் ஒன்று கூவியது.

''கொக்.... கரக்.....கோ !''

தாமரை இதழ் விரித்தது. எங்கிருந்தோ வண்டுகள் கூட்டமாகப் பறந்து வந்தன. அவை பூக்களிலிருந்த தேனைப் பருகின.

பகல் நேரம் தொடங்கிவிட்டது. வளைந்திருந்த மூங்கில் மெல்ல மெல்லத் தலைதூக்கிச் சுற்றிலும் பார்த்தது. வாழை, மா, பலா, வேம்பு முதலிய மரங்கள் அதை அலட்சியமாகப் பார்த்தன.

''உம்.... நீ எதற்குப் பிரயோசனம்?'' என்று அவை கேட்பது போல் இருந்தது.

அப்பொழுது பூக்களில் தேனைச் சேகரித்துக் கொண்டு வண்டுகள் ரீங்காரமிட்டுக் கொண்டு வந்தன. மூங்கிலைப் பார்த்தவுடன் எல்லா வண்டுகளும் அதைச் சுற்றிச் சுற்றி வந்தன.

''பிணத்தைத் தூக்கப் பயன்படும் இந்த மூங்கிலுக்கு என்ன மகிமை? இந்த வண்டுகள் அதை அப்படிச் சூழ்ந்து கொள்கின்றனவே!''

''மகிமை! என்ன மகிமை? 'மக்கு மரமே! மக்கு மரமே!' என்று வண்டுகள் அதைப் பார்த்து ரீங்காரமிடுகின்றனவோ, என்னவோ!'' என்று வாழை வம்பளந்தது.

மூங்கிலின் முகம் வாடிவிட்டது.

''என்னை எதற்காக வீணாகப் பழிக்கிறீர்கள்?''

''வாழ்வுக்கும் மங்களத்துக்கும் நான் போய்வரும் வீடுகளில் எல்லாம் நீ அழ வைக்க வந்துவிடுகிறாயே, அந்த அநியாயத்துக்குத்தான்!'' என்றது வாழை.

மற்ற மரங்கள் எல்லாம் கைகொட்டிச் சிரித்தன.

வந்து, ''மேன்மை பொருந்தியவரே! இந்த விஷயத்தை வெகு சுலபமாக நிர்ணயித்து விடலாமே! இந்த மூன்று பேரையும் ஆளுக்கு ஒரு செவ்வாழையை நட்டுப் பயிராக்கச் சொல்லுங்கள். எந்தக் கன்று மூன்று நாட்களுக்குள் வளருகிறதோ, அந்தக் கன்றினைப் பயிரிட்டவன்தான் தங்கள் குமாரிக்கு ஏற்ற கணவன்'' என்று சொன்னான்.

வியாபாரி யோசித்தார்: 'மூன்று நாட்களில் கன்று வளருவது நடவாத காரியம். எனவே இந்தப் பரீட்க்ஷையில் இந்த மூன்று பேரும் நிச்சயம் தோற்றுப் போய் விடுவார்கள். இவர்களில் எவனையும் என் பெண் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதில்லை. அதுவும் நல்ல யுக்திதான்.'

இப்படி நினைத்துத் தேவதையின் யோசனையை வியாபாரி ஒப்புக்கொண்டார். அப்போதே மூன்று செவ்வாழைக் கன்றுகள் வரவழைக்கப்பட்டன. மாளிகையின் தோட்டத்தில் அவை நடப்பட்டன. குமாரிக்குச் சின்னவனைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை. அதனால் அவள் அவன் நட்ட செவ்வாழை சீக்கிரம் செழித்து வளராதா என்று நொடிக்கு ஒருதரம் வந்து பார்ப்பாள். இரண்டு நாட்கள் கழிந்த பிறகும் அது வளராததைக் கண்டதும் அவள் மனசில் கவலை குடிகொண்டது.

மூன்றும் நாள் வந்தது. குமாரிக்கு அது வளர்ந்துவிடும் என்ற நம்பிக்கை இல்லை. இருந்தாலும் 'செவ்வாழைக் கன்றினைப் பார்த்துவிட்டு வருவோம்' என்று தோட்டத்துக்குப் போனாள். வழியில் அவள் காதல் கொண்ட இளைஞனும் வந்து கொண்டிருந்தான். அவன் வழி தெரியாமல் திண்டாடுகிறான் போலிருக்கிறது என்று அவள் நினைத்தாள். ஆனால் அவனும் செவ்வாழைக் கன்றினைப் பார்ப்பதற்காகத்தான் தோட்டத்துக்குப் போய்க் கொண்டிருந்தான். இரண்டு பேரும் சேர்ந்து தோட்டத்துக்குப் போனார்கள். அங்கே பார்த்தால் அவன் வைத்த செவ்வாழைக் கன்றுதான் நன்கு உயர்ந்து வளர்ந்திருந்தது.


அதைக் கண்டதும் குமாரிக்கு வந்த சந்தோஷத்துக்கு அளவே யில்லை. அவள் கையைத் தட்டிக் கொண்டு குதூகலமாய்க் குதித்தாடினாள். சின்னவனும் ஆனந்தம் மிகுதியால் ஆர்ப்பரித்தான். இரண்டு பேரும் சேர்ந்து வியாபாரியிடம் போய் விஷயத்தைச் சொன்னார்கள். வியாபாரிக்கு அதனால் சந்

''ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பயன். அதனால் உண்டாகும் பயனை மனிதன் சரியாக அறிந்து கொண்டு விட்டான். என் பயனை அவன் புரிந்து கொள்ள வில்லையோ, என்னவோ ? அது என் தவறு ?'' என்று கேட்டு மூங்கில் அழுதே விட்டது.

திடீரென்று ஓர் இனிய ஓசை! கல்லும் மண்ணும் செடியும் கொடியும் மரமும் மட்டையும் வானமும் வையகமும் வியந்தன. மூங்கிலைச் சுற்றியிருந்த மரங்கள் ''ஆஹா!'' என்று அதிசயித்தன.

''என்ன இனிமை ! என்ன இனிமை அற்புதம் அமுதம்! எங்கிருந்து வருகிறதோ இவ்வோசை?'' என்று சுற்று முற்றும் பார்த்தன.

மூங்கில் மரத்திலிருந்து அந்த ஓசை வந்தது. மற்ற மரங்கள் எல்லாம் வாய் மூடி நின்று விட்டன. மூங்கிலில் துளையிட்ட வண்டுகள் மௌனமாகப் பறந்து சென்றன. மூங்கிலின் துளைகளில் புகுந்து வந்த காற்று இனிய ஓசையை அலைபரப்பியது. உலகம் குழலோசையில் மயங்கி மூழ்கியது. மூங்கிலுக்கும் மனச் சுமை நீங்கியது. — மாயன்



தோஷம் உண்டாகவில்லை. தன்னுடைய அருமை மகள் ஓர் ஏழைக்கு வாழ்க்கைப் படுவது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் கொடுத்த வாக்கை எப்படி மாற்றுவது? வேறு வழியில்லாமல் மகளை அந்த இளைஞனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார். பிறகு அந்த இளைஞன் குமாரியைக் காட்டிலிருந்து ஒரு சின்ன வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனான். அந்த வீடு அவனுக்குத் தேவதை கொடுத்தது. அந்த வீட்டில் அவர்கள் இருவரும் ஆனந்தமாக வாழ்ந்தார்கள்.

ஒரு வருடம் ஆயிற்று. மூன்று சகோதரர்களும் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று பார்ப்பதற்காகத் தேவதை புறப்பட்டாள். முதலில் அவள் மூத்தவனிடம் போனாள். ஒரு பிச்சைக்காரன் போல் வேஷம் போட்டுக்கொண்டு அவனிடம் ஒரு குவளை 'ஷர்பத்' தாகத்துக்குக் கொடுக்கும்படி கேட்டாள். ஏழையாக இருந்தபோது உதவி செய்த அவன், இப்போது பணக்காரன் ஆனபிறகு ''இப்படி வருகிற போகிறவர்களுக்கு எல்லாம் ஷர்பத் கொடுத்துக் கொண்டிருந்தால் வாழ்ந்தாற்போலத்தான். அப்புறம் இதைத் தவிர எனக்கு வேறு வேலையே இருக்காது'' என்றான்.

தேவதை சட்டென்று அங்கிருந்து போய்விட்டாள். அவள் அந்தப் பக்கம் திரும்பினாளோ இல்லையோ, நதி ஜலம் முன்போலவே வெறும் தண்ணீராக மாறிவிட்டது.

இந்த ஆபத்தைக் கண்ட மூத்தவன், தேவதை பின்னால் ஓடி வந்து, கெஞ்சிக் கூத்தாடினான். ஆனால் அவள் ''அருகதை இல்லாதவனுக்கு ஒரு பொருளைக் கொடுக்கக் கூடாது'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு மறைந்து போய் விட்டாள்.

இரண்டாவது சகோதரனின் போக்கும் அப்படியே இருந்ததால் அவன் ஆஸ்தியும் மறைந்து போயிற்று.

அதன் பின் அவள் இளையவன் வீட்டுக்குப் போனாள். அப்போது அவன் தன் மனைவியுடன் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பிச்சைக்காரியைக் கண்டதும் அவனுக்குத் தன் ஏழைமை நாட்கள் நினைவுக்கு வந்தன. அவன் அவளை உள்ளே வந்து உணவு அருந்தும்படி பரிவாக அழைத்தான். தேவதை சுற்றுமுற்றும் பார்த்தான். சாப்பாடு தீர்ந்து போயிற்று என்று தெரிந்து கொண்டாள். அதைப் பார்த்து, குமாரி, ''நான் இதோ ரொட்டி சுட்டுக் கொண்டு வருகிறேன். நீங்கள் அதுவரை கொஞ்சம் இளைப்பாறுங்கள்'' என்று சொல்லி விட்டு உள்ளே போனாள். சிறிது நேரத்தில் ரொட்டி சுட்டுக் கொண்டு வந்து கறி வகைகளோடு தேவதைக்குச் சாப்பாடு போட்டாள். அவர்களது அன்பாலும் பண்பாலும் மகிழ்ந்து போன தேவதை தன் மந்திரக் கோலைச் சுழற்றினாள். அந்தச் சின்னஞ் சிறு குடிசை இருந்த இடத்தில் பிரும்மாண்டமான அரண்மனை ஒன்று காணப்பட்டது. அந்த அரண்மனையில் மூன்றாவது சகோதரனும் அவன் மனைவியும் மற்றவர்களுக்கு உபகாரம் செய்து கொண்டு தாங்களும் இன்பமுடன் வாழ்ந்தார்கள்.

(இமயமலைச் சாரலில் வழங்கும் கதையைத் தழுவியது)



சிரிக்கச் சிரிக்க...!




"குழந்தைக்கு ஒண்ணும் ஒண்ணும் எவ்வளவு என்பதைச் சொல்லிக் கொடுத்ததிலே, வாத்தியாரும் கத்துண்டதிலே குழந்தையும் களைச்சுப் போயிட்டாப் போலே யிருக்கு !"

சாமா




பாட்டி : குழந்தையை அழ விடாதேடீ, என்னிடம் கொண்டா, பாடித் தூங்கப் பண்றேன்.

தாயார்: அப்படிச் சொல்லியும் பயமுறுத்தியாச்சு, தூங்கமாட்டேங் கறான்.




"ஏண்டி 'அவனை இப்படி அழ விட்டே ?"


"பாரும்மா, நாங்க மணல்லே பள்ளம் தோண்டி விளையாடினோம். அந்தப் பள்ளத்தை வீட்டுக்குள் எடுத்து' வந்தால்தான் ஆச்சுன்னு அடம் பிடிக் கறான் !"



"உங்கப்பா பயில்வானா இருக் கறது எவ்வளவு நல்ல தாய்ப் போச்சுடா உனக்கு ?"



போலீஸ் : அந்தத் திருட்டுக் கேஸிலே எல்லா ரையும் புடிச்சு உள்ளே 'தள்ளி' யாச்சு. அந்த நெருப்புக் கோழிப் பயல் மாத்திரம்' தலைமறைவாகவே இருக்கான் !


ஷீலாவைக் காணோம்
14
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
டைகர் உன் சூட்சும புத்தி எனக்கில்லைதான். குதிரையைத் தேடி நாம் வருவோம் என்பதை அறிந்த அந்தக் கொடிய வர்க்கரின் காரியம்தான் இது. அவர்களும் இங்குதான் எங்கோ ஒளிந்திருக்க வேண்டும்...
நீ இங்கேயே இரு. நான் குதிரையைப் போய் அவிழ்த்து வருகிறேன்.
டைகர், அதோ பார் அவர்களை. நாம் நினைத்தது சரிதான்.
இத்தனூண்டுப் பொண்ணு நீ. என்ன வேலைத்தனமெல்லாம் காட்டறே?
அத்தனையும் அந்த நாயோட யோசனை. இந்தத் தடவை நீ தப்ப வே முடியாது.
ஷீலாவை அவர்கள் துரத்திக் கொண்டு ஓட, டைகர் குதிரையை அவிழ்த்துக் கடிவாளத்தைக் கௌவியபடி அதை விரட்டிக் கொண்டு அவர்களைத் தொடருகிறது.
ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஷீலாவைத் துரத்திச் செல்லும் இருவருக்கிடையே குதிரையை விரட்டி ஒருவனை அதனால் வீழ்த்தி, மற்றவனைக் கடிவாளக் கயிற்றால் கால் இடறி விழும்படி செய்கிறது அற்புத நாய் டைகர்.



...ரும்படி மென்மை பாஷையில் உத்தரவு இடுகிறது டைகர்.
ரொம்ப நன்றி டைகர்.. நீயும் ஏறிக் கொள்.
...கொண்டுவா. அவளைத் தப்ப விடக் கூடாது.
காட்டுப் பகுதிக்கு குதிரையை அழைத்துச் செல்கிறது.
டைகர், அவர்கள் காரிலிருந்து இறங்கி ஓடி வருகிறார்கள். ஆனால் குதிரை வேகத்துக்கு அவர்களால் ஓடி வர முடியாது.
பின்னால் வரும் அவர்களைப் பார்த்தபடியே ஷீலா குதிரையை விரட்டியதில் தனிந்திருந்த ஒரு மரக் கிளைக்குத் தலை குனியத் தவறி விட்டாள். அதன் பலன்....
ஆ.. ஐயோ அம்மா!
குதிரை மறுபடி ஓடி விட்டது. ஷீலா மூர்ச்சையாகிக் கிடந்தாள். துரத்தி வருபவர்களின் காலடி ஓசையை உற்றுக் கேட்டது டைகர். அடுத்தபடியாகச் செய்ய வேண்டியதையும் முடிவு செய்து விட்டது. அது என்ன?
தொடரும்..

விளையாட்டுக்கள் —

அடடா! அத்தனை பழசா?



□ பகடைக் காய், தாயக் கட்டை இவைகளை உருட்டி அதிர்ஷ்டத்தை நம்பி விளையாடும் ஆட்டம் மிக மிகப் பழங்காலத்திலிருந்து தொடர்ந்துவருகிறது. பாரதப் போரே பகடைக் காயினால் நிகழ்ந்ததுதானே? மரத்திலோ, தந்தங்களினாலோ செய்த கன சதுரக் காய்களில் ஒன்று முதல் ஆறு புள்ளிகளைக் குறித்திருப்பார்கள். புராதன எகிப்தியர்களின் கல்லறைகளில் இம்மாதிரியான காய்கள் காணப்படுவதால், அவர்களிடமும் இந்த ஆட்டம் பிரபலமாக இருந்திருப்பது தெரிகிறது.

□ சைக்கிள் சக்கரத்தையோ ஒரு கம்பி வளையத்தையோ குச்சியால் உருட்டிக் கொண்டு ஓடுவது உங்களில் பலருக்கு மகிழ்ச்சி அளிக்கும் விளை

ரோமானியர்கள் மிகத் தீவிரமான விளையாட்டாக விளையாடி இருக்கிறார்கள், பெரியவர்களும் குழந்தைகளும். பூமியில் வரையப்பட்ட வட்டத்தினுள் உருண்டையான கூழாங்கற்களைக் கோலியாகக்கொண்டு இந்த ஆட்டத்தை ஆடினார்கள். பின்னால் சலவைக் கல்லினால் கோலிகளைச் செய்தார்கள். இன்று கண்ணாடி கோலிகள்!

□ காகிதமும் எழுதுகோலும் தோன்றுவதற்கு வெகுகாலம் முன்பே வட்டமும் சிலுவையும் கொண்டு விளையாடும் ஆட்டம் தோன்றிவிட்டது. மணலில் குச்சி அல்லது விரலால்



இருக்கின்றனர். நவீன ஆட்டத்தின் விதிமுறைகள், கோல் கம்பங்கள், ஆட்டக்காரர்கள் இருக்க வேண்டிய நிலை ஆகியவை விக்டோரியன்கள் ஹாக்கி ஆட்டத்தில் ஈடுபாடு காட்டிய பிறகு 1875 வாக்கில் தான் உருவாக்கப்பட்டன.



□ மத்திய காலத்தில் பெரியவர்களாலும் குழந்தைகளாலும் ஆடப்பட்டது ஒரு பழங்காலத்து விளையாட்டு. இதற்கு —க்ளப் பால் (குச்சிப் பந்து) என்று பெயர். 1889ம் ஆண்டு வரை இந்த விளையாட்டுக்கு விதிமுறைகள் ஏதும் வகுக்கப்படவில்லை. அதன் பிறகு 'ரவுண்டர்ஸ்' என்ற பெயரில்

நாட்டவர் ரோமானியர்களுக்குத்தான் புகழாரம் சூட்டுகிறார்கள். மேல் நாட்டவர் இதை 'ஹாப்ஸ் காட்ச்' என்பார்கள். ஸ்காட்ச் என்றால் ஸ்கோர் என்று பொருள். இதில் முன்னேறுவதை ஆத்மாவின் வளர்ச்சி என்றும் முடிவைச் சொர்க்கம் என்றும் குறிப்பிடுவார்கள். நமது பரமபதம் விளையாட்டு மாதிரி.

□ நாம் ஆடும் கண்ணாமூச்சியைத்தான் மேல்நாட்டினர் வேறு வகையாக விளையாடுகிறார்கள். 'மேல்நாட்டவர் கண்ணைக் கட்டுவதற்குப் பதில் ஒரு குல்லாயினால் அவன் தலையை மூடி விடுகிறார்கள். இதற்கு 'ஹூட்மேன் பிளைண்டு' என்று பெயர்.



□ பிள்ளையார் பந்து ஆடி இருக்கிறீர்களா?' ஒரு கல்லைப்



யாட்டு இல்லையா? ஆதி கிரேக்கர்கள் தங்கள் குழந்தைகளை ஓட்டத்தில் ஒப்பற்றவனாக்க இந்த வளையம் உருட்டும் விளையாட்டில் ஊக்கப்படுத்தினார்களாம்.

□ கோலி குண்டு விளையாடுகிறீர்களே, இதைப் புராதன



கோடு கிழித்து இந்த ஆட்டம் விளையாடப்பட்டது. வட்டங்களையும், சிலுவைகளையும் இணைப்பது மந்திர வித்தையாகக் கருதப்பட்டது.



□ ஓடிப் பிடித்து விளையாடுவது மிக மிகப் புராதனமான விளையாட்டு. மனிதன் காடுகளில் வசித்த போதே குழந்தைகள் இவ்விளையாட்டை ஆடி இருக்க வேண்டும். பிற்காலத்தில் இவ்விளையாட்டில் மந்திரங்களும் மத நம்பிக்கைகளும் புகுந்துகொண்டன.

□ இன்றைய ஹாக்கியைப் போலவே இங்கிலாந்தில் டியூடர்கள் காலத்திலேயே ஆடி இருக்கிறார்கள். இதற்கு ஹுாரி பட் (Huri bat) என்று பெயர். மட்டைக்குப் பதில் வெறும் கட்டைகளைக் கொண்டு ஆடி

இரு கோஷ்டி ஐந்து 'பேஸ்' என்ற விதிமுறைப்படி இதை ஆடலானார்கள். அமெரிக்கரின் தேசிய விளையாட்டான 'பேஸ் பால்' இதிலிருந்து தோன்றியதுதான்.



□ நொண்டியடித்துத் தாண்டிக் குதிக்கும் பாண்டி ஆட்டத்தின் தொன்மைக்கும், மேல்



பந்தால் அடித்து வீழ்த்துவது. இதே மாதிரி ஐரோப்பாவில் ஒன்பது கூர் உருளைகளை அடுக்கி வைத்து எட்டி நின்றபடி ஒரு குச்சியை வீசி அவைகளை



வீழ்த்துவார்கள். இதற்கு 'நைன் பின்ஸ்' என்று பெயர். பதினைந்தாம் நூற்றாண்டில் பிரான்ஸிலிருந்து இங்கிலாந்துக்கு வந்த ஆட்டம் இது.

□ வட்டெறிதல் என்றொரு விளையாட்டு. நம் நாட்டில் பழங் காலந் தொட்டு விளையாடப்படுகிறது. நவீன விளையாட்டில் பதினாறு பவுண்டு இரும்புக் குண்டை வீசி எறிவது ஒரு வகை. ஆனால் பதினைந்தாம் நூற்றாண்டிலேயே இதற்கான ஆதாரம் மேல்நாடுகளில் கிடைக்கிறதாம். வாலிபர்கள் கனமான கற்களை வீசித் தங்கள் பலத்தைக் காட்டுவார்களாம்.





☐ பச்சைக் குதிரை என்று நீங்கள் கூறுவதை மேல்நாட்டார் தவளைத் தாவல் என்கிறார்கள். ரோமானியர்களிடம் இது பிரபலமான ஆட்டமாம். வளைந்து கொடுக்கும் குணத்தைப் போதிப்பதற்கு இவ்விளையாட்டைக் குழந்தைகளிடையே பிரபலமாக்கினார்கள் ரோமானியர்கள். இன்றும்கூட பள்ளிகளில் இதற்காகவே இவ்விளையாட்டு இடம் பெறுகிறது.

☐ அம்மானை ஆட்டம் நம் நாட்டில் எத்தனை புராதனமானது என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் ஆங்கிலேயர்கள் கிரேக்கர்களையும் ரோமானியரையும்தான் புராதன பெருமைக்கு உதாரணம் காட்டுவார்கள். புராதன கிரேக்கக் குழந்தைகள் 'ஆடுகளின் மூட்டு எலும்புகளைக் காயாக்கித் தூக்கிப் போட்டுப் பல நிலைகளில் பிடித்து ஆடினார்களாம்.



☐ பாட்டில்டோர், ஷட்டில்காக் ஆகியவை விக்டோரியன் காலத்துப் பெண்கள் விரும்பி ஆடிய விளையாட்டுக்கள். இந்த ஆட்டங்களை ஆடும் போது கூடவே பாட்டுப் பாடுவார்கள். இவ்விளையாட்டுக்கள்தான் பின்னால் பாட்மிண்டனாக மாறியது. 1860ம் வாக்கில். வெகு வேகமாகவும் லாகவமாகவும் ஆடப்பட்ட பாட்மிண்டன் தோன்றியது.






☐ சாக்கட்டியால் வரையப்பட்ட வட்டத்திலுள்ளே நிற்கும் இருவர் — (தம்பதிகள்) வட்டத்துக்கு வெளியே நிற்கும் தம்பதிகளை வெளியே வராமலேயே பிடிக்க வேண்டும், பலின் சடுகுடு போல. முதலாம் எலிஸபெத்தின் காலத்தில் பிரபலமானது இந்த ஆட்டம். வட்டம்தான் நரகம். அதிலிருந்து விடுபடுவது தான் வெற்றி.



☐ மதச் சடங்குகளின்போது பலமான சத்தம் எழுப்புவதற்காகக் கிரேக்கர்களால் பயன்படுத்தப்பட்டது பம்பரம். மத்திய காலத்தில் இது குழந்தைகளின் குதூகலமான விளையாட்டாக மாறியது. சுற்றும் பம்பரத்துக்குச் சவுக்கடி கொடுத்து அதை ரீங்காரமிட்டு வேகமாகச் சுழலச் செய்வர்.

-விகேயெம்



கோயில் யானை

கோவில்யானை கோவில்யானை அதோ வருகுது-அந்தக்
கோபுரத்தின் பக்கமிருந்து இதோ வருகுது!
தாவியதன் முதுகின்மேலே பாகனேறவும் - அது
தாண்டித் தாண்டி வருகுது பார் வேகமாகவே!

மணியின் ஓசை 'டிங்குடாங்கு' என்று கேட்குது - ஒரு
மலையைப் போன்று அதுநின்று அசைந்து வருகுது
துணிவுகொண்ட சிறுவரெல்லாம் ஓடிவருகிறார்-அதன்
தும்பிக்கையில் காசுபோடத் துடிதுடிக்கிறார்

வெல்லமுடன் அரிசிவைத்தால் விரும்பித்திங்குது
-யானை
வாழைப்பழம் தென்னைமட்டை கரும்பும் திங்குது
சொல்லுகின்ற சொற்களுக்கு அடங்கிச்செல்லுதே
-பாகன்
சொன்னபடி கேட்டுஅது நடந்துகொள்ளுதே!

முறத்தைப் போன்ற காதுகளை ஆட்டி வருகுது - தன்
முகத்திலுள்ள துதிக்கையினை நீட்டிவருகுது
பெருத்தஅதன் உடல்தனக்குப் பொருத்தமாகவே
-கண்கள்
பெற்றிருக்க வில்லைஇது வருத்தமானதே!

யானைமீது சிறுவரெல்லாம் ஏறிஅமர்கிறார் - உடன்
யானைப் பாகன் பையில்காசைப் போட்டு நிமிர்கிறார்
பூனைகண்டு ஓடிஒளியும் குழந்தைகூடவே - இந்தப்
பூதம்போன்ற யானைகண்டு அஞ்சுவதில்லை!

— 'பரதூர் ராமு'

சொன்னதைக் கேட்கணும்


கொட்டும் கோடை மழையிலே
குறும்புப் பாலு ஓடினான்
தொட்டு இழுத்த பாட்டியைத்
துரும்புபோலப் பேசினான்.

பல்லுப் போன தாத்தாவும்
பாசமுள்ள அம்மாவும்
சொல்லிக்கூடக் கேட்கலே -
சுட்டிப் பயல் நனைகிறான்.

ஆடை முழுதும் நனைந்தபின்
அந்த மழை நின்றது
கோடை மழையில் லட்சியம்
குளிப்பதிலே வென்றது.

எடுத்த குறும்பை முடித்ததில்
இணையில்லாத சந்தோஷம்
அடுத்த நாளில் அவனுக்கோ
அளவில்லா ஜலதோஷம்.

— சி. பாலதண்டபாணி





கல்லைக் கேட்போம்

எஸ். சித்ரா

அந்தச் சின்னப் பையனின் பெயர் ஆறியூ. அவன் சீன தேசத்தில் கான்டன் என்ற நகரத்துக்குப் பக்கத்தில் ஒரு சிறிய கிராமத்தில் தன் பாட்டியுடன் வசித்து வந்தான்; பெற்றோர் இல்லை. அவனுடைய பாட்டி மிகவும் ஏழை. கேக்குகள் தயாரித்து விற்றுப் பணம் சம்பாதித்து வந்தாள். அவள் எண்ணெயில் கேக்குகள் சுடுவாள். ஆறியூ கேக்குகளை நகரத்துக்கு எடுத்துச் சென்று வீதிகளில் விற்று வருவான்.

ஒரு நாள் அவனுடைய பாட்டி முந்நூறு கேக்குகளைத் தயாரித்தாள். ஆறியூ எண்ணெய்க் காகிதங்களைத் தன் கூடையில் பரப்பி அவற்றின் மேல் கேக்குகளை அடுக்கி வைத்துக் கொண்டு நகரத்துக்குச் சென்றான்.

அவன் வெகு சீக்கிரம் கேக்குகளை விற்றுவிட்டான். அவனுக்கு முந்நூறு காசுகள் கிடைத்தன. அவன் பணத்தைக் கூடையினுள் எண்ணெய்க் காகிதத்தின் அடியில் வைத்தான்.

அப்போது வீதியில் ஒரு கிழவி பழக் கூடையை எடுத்துச் சென்று கொண்டிருந்தாள். திடீரென்று அந்தக் கூடையிலிருந்த பழங்கள் கீழே உருண்டோடின. ஆறியூ தன் கூடையைக் கீழே வைத்துவிட்டுக் கிழவிக்கு உதவி செய்ய ஓடினான். பழங்களைப் பொறுக்கித் துடைத்துக் கூடையில் வைத்துக் கிழவியிடம் கொடுத்தான்.

பிறகு ஆறியூ தன் கூடை வைத்திருந்த இடத்துக்குச் சென்றான். ஆனால் அங்கு கூடையைக் காணோம். சுற்று முற்றும் பார்த்த ஆறியூ தன் கூடை ஒரு பெரிய கல்லின் பக்கத்திலிருக்கக் கண்டான். எண்ணெய்க் காகிதத்தினடியில் கையை விட்டுப் பணம் பத்திரமாக இருக்கிறதா என்று பார்த்தான் ஆறியூ. பணத்தைக் காணோம்! பணம் போய்விட்டது!

பெரிதாகக் கூக்குரலிட்டான் ஆறியூ.

''ஐயோ! என் பணம் போய்விட்டதே! ஐயோ!''

அவனுடைய கூக்குரலைக் கேட்டு அந்த வீதியில் இருந்தவர் அனைவரும் ஓடிவந்தனர்.

''ஓ....ஓ!... என் பணம் போய்விட்டது! யாரோ திருடி விட்டார்கள். என் பாட்டி என்ன செய்வாள்! அவள் மிகக் கஷ்டப்பட்டு எண்ணெயில் சுட்டு முந்நூறு கேக்குகள் தயாரித்தாள். எல்லாவற்றையும் நான் விற்றேன். ஆனால் ஐயோ! என் பணம் போய் விட்டதே!'' என்று புலம்பினான்.

பா காங் ஒரு நீதிபதி. அவர் மிக நல்லவர். எல்லோரிடமும் கருணையுடன்

நடந்து கொள்வார். அவனுக்கு அவரைப் பற்றித் தெரியும். அதனால் அவன் அவரிடம் ஓடினான்.

"ஓ! ஐயா! எனக்கு உதவுங்கள். என் பணத்தை யாரோ திருடிவிட்டார்கள். கருணை கூர்ந்து என் பணத்தை யார் திருடினார்கள் என்று கண்டுபிடித்து எனக்கு அதை மீட்டுத் தாருங்கள்!"

பா காங் அங்கு நின்று கொண்டிருந்தவர்களை நோக்கினார். ஒவ்வொருவராக எல்லோரையும் கேட்டார், "ஆநியூவின் பணத்தை எடுத்தவர் யார்?" என்று. ஒருவரும் எடுக்கவில்லை என்று பதில் சொன்னார்கள்

அப்போது பா காங் சொன்னார்: "உங்களில் ஒருவரும் எடுக்கவில்லை. உங்களைத் தவிர இந்தப் பெரிய கல்தான் இருக்கிறது. அதனால் இந்தக் கல்தான் பணத்தை எடுத்திருக்க வேண்டும்."

பா காங் தம் வேலைக்காரர்களிடம் "இந்தக் கல்லை நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லுங்கள்" என்று சொன்னார்.

ஜனங்கள் யாவரும் சிரித்தனர்.

பா காங் கேள்விகள் கேட்கும்போது இந்தக் கல் என்ன சொல்லும் என்று எல்லோரும் விசாரணை நடக்கும் இடத்துக்குப் போய்ப் பார்க்க விரும்பினார்கள்.

"நீங்கள் வந்து விசாரணையைப் பார்க்கலாம். ஆனால் ஒவ்வொருவரும் இருபது காசுகள் கொடுத்தால்தான் நீதிமன்றத்தினுள் அனுமதிக்கப் படுவீர்கள்."

பா காங்கின் வேலைக்காரர்கள் அந்தக் கல்லை நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றார்கள். ஆநியூ நீதிபதியுடன் நீதி மன்றத்துக்குச் சென்றான்.

பா காங் தம் வேலைக்காரர்களிடம் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து நீதிமன்றத்தின் வாசலில் வைக்கச் சொன்னார்.

பா காங் ஜனங்களிடம் சொன்னார்: "ஒவ்வொருவரும் இருபது காசு பாத்திரத்தில் உள்ள தண்ணீரில் போட்டு விட்டு நியாயஸ்தலத்துக்குள் செல்லலாம்."

பாத்திரத்தின் பக்கத்தில் பா காங் நின்று கொண்டிருந்தார். ஒவ்வொரு மனிதனும்பணத்தைப் போடும்போது அவர் பாத்திரத்தினுள் பார்த்துக் கொண்டிருந்தார். கடைசியில் கொழுக்கட்டை மூக்கன் ஒருவன் இருபது காசுகளைப் போட்டான்.

"இவன்தான் பணத்தைத் திருடியவன்" என்றார் பா காங். பிறகு வேலைக்காரர்களிடம் "அவனைப் பிடியுங்கள். அவனுடைய பையில் பாருங்கள். சிறுவனுடைய காணாமல் போன பணத்தைக் காண்பீர்கள்!" என்றார்.

பா காங்கின் வேலைக்காரர்கள் அந்த மனிதனைப் பிடித்து அவனுடைய பையைச் சோதனை செய்தனர். அதில் இருநூற்றுஎண்பது காசுகள் இருந்தன.

"என் பணம்! என் பணம்!" என்று கத்தினான் ஆநியூ. "ஆம். உன் பணம் தான்" என்றார் பா காங்.

"ஆனால் இதுதான் அந்தப் பையனின் பணம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கொழுக்கட்டை மூக்கன் கேட்டான்.

"ஆம் ஐயா! நீங்கள் எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?" என்று கேட்டான் ஆநியூவும்.

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கூடியிருந்தோர் அனைவருமே ஆவலுடன் கேட்டனர்.

"இதோ, இந்தத் தண்ணீரைப் பாருங்கள். ஆநியூ தன் பணத்தைக் கூடையில் எண்ணெய்க் காகிதத்தின் அடியில் வைத்திருந்தான். அதனால் அவனுடைய நாணயங்களும் எண்ணெயில் நனைந்திருக்கும் என்று நினைத்தேன். இந்தத் தண்ணீரில் எண்ணெய் மிதப்பதைக் கவனித்துப் பாருங்கள். இந்த எண்ணெய் இந்த மனிதன் காசைப் போட்டபோது தான் மேலே வந்தது" என்றார் நீதிபதி.



பிறகு பா காங் தம் வேலைக்காரர்களிடம் சொன்னார்: "ஆநியூவிடம் அவனுடைய பணத்தையும் பாத்திரத்தில் உள்ள பணத்தையும் கொடுங்கள். ஆநியூ, உன் பாட்டி அருமையான கேக்குகள் தயாரிக்கிறாள். நீ அவளிடம் எனக்கு இருபது சிறிய கேக்குகள் செய்யச் சொல்லி அவற்றை என் வீட்டில் கொண்டு வந்து கொடு!" என்றார்.

ஆநியூ மகிழ்ச்சியுடன் குதித்துக் கொண்டே பாட்டியிடம் சென்றான்.

கணக்குன்னு கணக்குத்தான் !

கீழ்க்கண்ட வரிகளில் உள்ள எண்களில் ஒன்றுமட்டும் மற்றவையைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. அவற்றைக் கோடிட்டுக் காட்டுங்கள்.

(அ) 18, 16, 4, 8, 20, 12.
(ஆ) 34, 72, 17, 51, 68, 85.
(இ) 14, 9, 12, 19, 18, 29.
(ஈ) 5, 3, 7, 4, 1. 17.
(உ) 1, 5, 9, 3, 7, 6.
(ஊ) 6, 4, 8, 2, 3.

விடை :

(அ) 18. ஏனென்றால் மற்றவையெல்லாம் நான்கால் மீதியின்றி வகுபடும்.
(ஆ) 72. ஏனென்றால் மற்ற எண்கள் 17ல் மீதியின்றி வகுபடுகின்றன.
(இ) 9. ஏனென்றால், மற்ற எண்கள் இரண்டு இலக்கங்களைக் கொண்டுள்ளன.
(ஈ) 17. ஏனெனில் மற்றவை ஒரே இலக்கத்தினைக் கொண்டவை.
(உ) மற்ற எண்கள் எல்லாம் ஒற்றைப்படை எண்கள்.
(ஊ) 3. மற்றவை இரட்டைப்படை எண்கள்.

— கே. ஆர். ராதாகிருஷ்ணன்

வர்க்கம், வர்க்க மூலம் இவற்றைத் தெரிந்து வைத்திருப்பவர்கள் இதைப் படிக்கலாம்.

இரண்டு அடுத்தடுத்த இரட்டைப் படை எண்களின் பெருக்குத் தொகையோடு ஒன்றைக் கூட்டினால், கூட்டி வரும் தொகையானது அடுத்தடுத்த இரட்டைப்படை எண்களுக்கு மத்தியிலுள்ள ஒற்றைப்படை எண்ணின் வர்க்கமாகும்.

உதாரணம்:

(1) $8 \times 10 + 1 = 81$;
$9 \times 9 = 81$.

(2) $30 \times 32 + 1 = 961$;
$31 \times 31 = 961$.

அதுபோலவே இரண்டு அடுத்தடுத்த ஒற்றைப்படை எண்களின் பெருக்குத் தொகையோடு ஒன்றைக் கூட்டினால் வரும் கூட்டுத் தொகையானது அந்த ஒற்றைப்படை எண்களின் மத்தியிலுள்ள இரட்டைப்படை எண்ணின் வர்க்கம் ஆகும்.

உதாரணம்:

$11 \times 13 + 1 = 144$;
$12 \times 12 = 144$;
$31 \times 33 + 1 = 1024$;
$32 \times 32 = 1024$.

—ஜெயகுமார்

'142857' என்ற எண் விசித்திரமானது. ஏனெனில் அதை 2, 3, 4, 5, 6 ஆகிய எண்களைக் கொண்டு பெருக்கினால் '142857' என்ற எண்ணே வேறு விதமாய் அமைவதைக் காணலாம்.

$142857 \times 2 = 285714$
$142857 \times 3 = 428571$
$142857 \times 4 = 571428$

சில எண்களும் அவற்றின் மும்மடிப் பெருக்கங்களும்கூட விசித்திரமானவை. இவற்றைக் கவனியுங்கள்.

$8^3 = 512$; ஆனால் $5 + 1 + 2 = 8$

$17^3 = 4913$; $4 + 9 + 1 + 3 = 17$

$18^3 = 5832$; $5 + 8 + 3 + 2 = 18$

26, 27 போன்ற எண்களும் இவை போன்றவைதான். வேண்டுமானால் சோதித்துப் பாருங்களேன்.

மேலும் சில கணித விசித்திரங்கள்,

$45 = 20 + 25$
$45^2 = 2025$
$55 = 30 + 25$
$55^2 = 3025$
$297 = 88 + 209$
$297^2 = 88209$

— சௌந்தரா மகாதேவன்

உங்களால் இருபத்தைந்திலிருந்து ஒன்றை எத்தனை முறை கழிக்க முடியும்?


ஐந்து வினாடிகளில் மூன்று எண்கள் சொல்ல வேண்டும். அந்த எண்களைக் கூட்டினாலும் பெருக்கினாலும் ஒரே விடைதான் வரவேண்டும்.

விடை : 1, 2, 3.
$1 + 2 + 3 = 6$; $1 \times 2 \times 3 = 6$.

விடை: ஒரே ஒரு முறைதான். ஆனால் பலர் 25 முறை என்பார்கள். '25'ல் இருந்து ஒருமுறை கழித்த பிறகு அது '24' ஆகிவிடு மல்லவா?

— தம்பிதுரை





ரயில் இன்ஜினின் முன்புறம் கீழே இருப்புப் பாதைக்குச் சிறிது உயரத்தில் இரும்புச் சட்டத்திலான தடை இருக்கிறதே, அதை 'கேட்டில்—கார்டு' (Cattle Gaurd) அல்லது 'கௌ-கேட்சர்' (Cow Catcher) என்று சொல்வார்கள். ரயில் வரும்பொழுது இருப்புப் பாதையில் ஆடு, மாடு, எருமை போன்ற மிருகங்கள் குறுக்கே விழுந்து விட்டால் அவைகளை இந்தத் தடை தூக்கி எறிந்து விடும். மாடுகளின் கொம்பு ரயில் சக்கரத்தில் சிக்கிவிட்டால், வண்டி கவிழ்வதற்கு ஏதுவாகும். ரயில் வண்டியின் பாதுகாப்புக்காக இதை எல்லா ரயில் என்ஜின்களின் முகப்பிலும் பொருத்தி யிருப்பார்கள்.

ரயில் இன்ஜின் பாய்லரின் இரு புறங்களிலும் இரும்புத் தகட்டினுலான சுவர் எழுப்பியுள்ளதே, அது ஏன் தெரியுமா? புகை போக்கியின் வழியாக வெளியே வரும் கரிப்புகை ரயில் ஓடும்

ரயில் வண்டி ரகசியங்கள்

பொன்மலை பரிமளம்

விடுவார்கள். இதற்காக ஓர் ஊழியர் எப்பொழுதும் அங்கே இருப்பார். அவர் கொஞ்சம் அசந்து விட்டாலும், கேட் திறந்திருக்கிறதே, ரயில் வண்டி வருவதற்கு முன் இருப்புப்பாதையைக் கடந்து சென்று விடலாம் என்ற தைரியத்தில் வாகனத்தில் வருபவர்கள் இருப்புப் பாதையைக் கடந்து செல்லும் பொழுது ரயிலுல் மோதப்பட்டு விபத்துக்குள்ளாகலாம். இதைத் தவிர்க்க 'இன்டர்லாக் சிஸ்டம்' (Inter Lock System) கொண்டு வந்திருக்கிறார்கள். 'இன்டர்லாக் சிஸ்டம்' என்றால் என்ன தெரியுமா?

ரயில் வருவதற்கு முன் மூடப்படும் கதவில் ஒரு சாவி நிரந்தரமாக இருக்கும். (இதை நாம் 'A' சாவி என்று வைத்துக் கொள்வோம்.) இந்தச் சாவியைக் கதவு திறந்திருக்கும்பொழுது எடுக்க முடியாது. கதவை மூடிய பின் இன்னொரு சாவியால் கதவைப் பூட்டுவார்கள். (இதை 'B' சாவி என்று வைத்துக்கொள்வோம்) கதவு சரியாகப் பூட்டப்பட்டால்தான் கதவில் இருக்கும் 'A' சாவியை எடுக்க முடியும். கதவில் இருக்கும் 'A' சாவியை எடுத்துக் கைகாட்டியை இறக்குவதற்கான 'லீவரின்' கீழே இருக்கும் பூட்டைத் திறந்தால்தான் கைகாட்டியை இறக்க



பக்கவாட்டில் அபாய அறிவிப்புச் சங்கிலி இருப்பதைக் காணலாம். அதன் கீழே 'அபாய அறிவிப்பு'—'**வண்டியை நிறுத்தக் கைப்பிடியை இழு. அகாரணமாய உபயோகிப்பவர்களுக்கு அபராதம் ரூ. 250 அல்லது ஆறு மாத சிறைத் தண்டனை**' என்ற அறிவிப்பு வாசகத்தை நீங்கள் படித்திருப்பீர்கள்.


இந்த அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்ததும் ரயில் வண்டி உடனே எப்படி நிற்கிறது தெரியுமா?

பொழுது இந்தத் தகடுகள் இல்லாமல் போனால் சில சமயங்களில் மேலே செல்லாமல் பாய்லரைச் சுற்றிக் கொண்டுவிடும். அப்பொழுது இன்ஜினில் இருக்கும் டிரைவர் 'லுக்கிங் கிளாஸ்' வழியாகப் பார்க்கும் பொழுது எதிரே இருப்புப் பாதை சரியாகத் தெரியாது. இந்தக் கரிப் புகை இன்ஜினைச் சுற்றிக் கொண்டிருக்காமல் மேல் நோக்கிச் செல்ல இந்த இரும்புத் தகடுகள் கொண்ட சுவர்களை வைத்திருக்கிறார்கள். இந்தத் தகடுகளின் ஊடே நுழையும் காற்று கரிப் புகையை மேல் நோக்கிச் செல்லும்படி செய்கிறது. இந்த இரும்புத் தகட்டிலுைான சுவருக்கு 'ஸ்மோக் - டிப்லெக்டர்' (Smoke Deflector) என்று பெயர்.

எதிர் காற்று இன்ஜினை மோதுகிற போது இச்சுவர்கள் ஊடே பாய்ந்து வெளியேறிவிடுவதால் இன்ஜினும் வேகம் தடைபடாமல் ஓடிக் கொண்டிருக்கும்.

சில வருடங்களுக்கு முன் 'லாரி ரயில் வண்டியுடன் மோதி விபத்து ஏற்பட்டது', 'இரட்டை மாட்டு வண்டி மீது ரயில் வண்டி மோதியது' என்ற செய்திகளை நீங்கள் படித்திருக்கலாம். இது போன்ற செய்திகள் இப்பொழுது அதிகமாக இருப்பதில்லை. காரணம் என்ன?

நெடுஞ்சாலைகளின் குறுக்கே இருப்புப் பாதை செல்லும்போது லெவல் கிராஸிங்குகளில் ரயில் கேட் இருப்பதைக் காணலாம். ரயில் வண்டி வரும்பொழுது வாகனங்களோ, மனிதர்களோ ரயில் பாதையின் குறுக்கே செல்லாமல் இருக்க ரயில்கேட்டை மூடி



முடியும். கைகாட்டி இறங்கி இருக்கும் பொழுது கைகாட்டியின் லீவரில் இருக்கும் 'A' சாவியை எடுக்க முடியாது. கைகாட்டி இறங்கியிருந்தால் பாதை சரியாக இருக்கிறது என்பதை அறிந்த இன்ஜின் டிரைவர் வண்டியை நேராகச் செலுத்திக் கொண்டு செல்வார். ரயில் வண்டி சென்றதும் கைகாட்டியைச் சரியாக வைப்பதற்கு மறுபடியும் லீவரை இழுத்துவிட்ட பின் லீவரிலிருந்து 'A' சாவியை எடுத்துக் கதவில் கொண்டு போய்ப் போட்டுக் கதவைத் திறந்தால்தான் மூடியிருக்கும் கதவைத் திறக்க முடியும். கதவில் இருக்கும் 'B' சாவியையும் எடுக்க முடியும்.

இந்த முறையால்தான் இப்பொழுது விபத்துக்கள் தவிர்க்கப்படுகின்றன.

ரயில் வண்டியில் பிரயாணம் செய்யும்பொழுது நீங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஆசனத்துக்கு மேலே

ரயில் என்ஜினிலிருந்து கடைசி ரயில் பெட்டி வரையில் வாக்குவம் பிரேக்குக்கான (காற்றுத் தடை) காற்று, 'பைப்' வழியாகச் சென்று கொண்டிருக்கும். ரயில் பெட்டியில் இருக்கும் அபாயச் சங்கிலியை இழுத்ததும் இந்த வாக்குவம் தடை வண்டியின் வேகத்தைக் குறைத்து நிறுத்துகிறது. ஓடிக்கொண்டிருக்கும் வண்டி திடீரென்று நின்றதும் இன்ஜினில் இருக்கும் 'வாக்குவம் கேஜ்'ஜும், கார்டு பெட்டியிலிருக்கும் 'வாக்குவம் கேஜ்'ஜும் (Vaccum Gauge) யாரோ அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்ததால்தான் வண்டி நின்றிருக்கிறது என்பதைக் காட்டிவிடும். இன்ஜின் டிரைவர் 'கூக்கூ, கூக்கூ, கூக்கூ' என்று மூன்று தடவை நீண்ட ஒலி எழுப்பிச் சங்கிலியை இழுத்ததால்தான் வண்டி நின்றது என்பதைக் கார்டுக்கு உறுதி செய்வார். உடனே டிரைவரும் கார்டும் கீழே இறங்கி எந்தப் பெட்டியில் அபாய அறிவிப்புச் சங்கிலி இழுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய ஒவ்வொரு பெட்டியின் கடைசியிலும் மேல் புறத்திலிருக்கும் 'டிஸ்க்' (Disc)கைப் பார்த்துக் கொண்டு வருவார்கள். படத்தில் உள்ளபடி படுக்கை வசமாக இருக்கும் 'டிஸ்க்' நேர் வசத்தில் திரும்பியிருந்தால் அந்தப் பெட்டியில் உள்ளவர்கள்தான் சங்கிலியை இழுத்திருக்கிறார்கள் என்று தெரிந்து, இழுத்தவர்களை விசாரித்துத் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள். நேர் வசத்தில் உள்ள 'டிஸ்க்'கை மறுபடியும் படுக்கை வசமாகத் திருப்பிச் சரி செய்து விட்டு மறுபடியும் வண்டி செல்லக் கார்டு உத்தரவு வழங்குவார்.

குடியரசுத் தலைவர் கிரியைச் சரியாகப் போடுங்கள்!

—தாணு



அடுத்த இதழில் யார்?

மிஸ்டர் ஸட்யான்!

ஜி. பாஸ்கர்

வெளிநாட்டிலிருந்து வரும் எந்த டூரிஸ்டும் மதுரை மாநகரத்தின் கோவிலைப் பார்க்காமல் திரும்புவதில்லை. அங்கு செல்லும் வெளிநாட்டவர்களுக்கெல்லாம், நடுத் தெருக் கோடியில் உள்ள குடிசையை ஒட்டிய கடையில் விற்கும் பாம்புத் தோல் டம்பப்பைகள், பாம்புத் தோல் செருப்புக்கள், அழகான பர்ஸுகள் இவற்றை வாங்காமல் போக மாட்டார்கள். அந்தக் குடிசையில் வாழ்ந்து வரும் கிழவன் பெயர் ராமன். அவன் காட்டுப் பகுதியில் சென்று அங்கு புதர்களிலும் புற்றுக்களிலும் வாழும் கொடிய நச்சுப் பாம்புகளைப் பிடித்துக் கொன்று, அவற்றின் தோலைப் பதப் படுத்தி விற்று வந்தான். அந்த நச்சுப் பாம்புகளின் அழிவில்தான் அந்தப் பாம்புப் பிடாரனின் வாழ்வு வளர்ந்தது.

மிகச் சிறிய குடிசை. உள்ளே இரண்டு மூன்று கலயங்கள் உறிகளில் தொங்கின. ஒரு சிறிய மரப் பெட்டி. இவைதான் அவனுடைய சொத்து. அவனுக்கு ஒரே ஒரு மகன். வயது சுமார் பத்து இருக்கும். அந்தச் சிறு பருவத்திலேயே அவனுக்குத் தந்தையின் துணிவும், ஆற்றலும் மிகுதியாக இருந்தன. ஓடுகின்ற பாம்புகளையெல்லாம் வாலைப் பிடித்து இழுத்துக் காற்றாடிமாதிரி சுழற்றுவான். சுழற்றி அந்தப் பாம்பைத் தந்தையின் கையில் கொடுப்பான். சில நாட்களுக்கெல்லாம் அந்தப் பாம்பு நல்ல படம் பொறித்த ஓர் அழகான டம்பப் பையாக மாறியிருக்கும். அடுத்த இரண்டு நாட்களுக்கெல்லாம் அது ஓர் அமெரிக்கச் சீமாட்டியின் கையிலோ, அல்லது ஒரு பிரெஞ்சு சீமாட்டியின் கையிலோ ஊஞ்சலாடும். கிழவனின் மரப் பெட்டியில் ஐம்பது ரூபாய் சேர்ந்துவிடும்.

அந்தச் சிறுவன் பெயர் சடையன். சடையன் கடையில் விற்கும் பொருள் களை வெளிநாட்டவர் ஆங்கிலத்தில் விலை கேட்டால், அவர்களுடன் அவன் ஆங்கிலத்திலேயே பேசிப் பேரம் செய்வான். இவ்வளவு ஆங்கிலம் எப்படி அவனுக்குத் தெரிந்தது? ஆனா, ஆவன் ஏக்கூட அவன் படித்ததில்லை. பள்ளிக்குச் சென்றதில்லை. புத்தகத்தைத் தொட்டதுமில்லை.

ஒரு நாள் ஓர் அமெரிக்கச் சினிமாப் படத் தயாரிப்பாளர் அந்தக் கடைக்கு வந்தார். சடையனிடம் விலை கேட்டார். ஆங்கிலத்தில்தான்! சடையன்



அவருடன் அவரைப் போலவே பேசி ஞன். கொச்சை ஆங்கிலம், மழலை மொழியுடன் பேரம் பேசிஞன். பாம்பும் கீரியும் சண்டையிடும் பொம்மை. அதன் விலை இருபது ரூபாய். விற்று விட்டான்.

இடுப்பில் கந்தைத் துணி, பரட் டைத் தலை, தலையில் எண்ணெய் தடவி யதே கிடையாது. அவனுடைய புத்தி சாலித்தனத்தைப் பாராட்டிய அந்த அமெரிக்கர், ''தம்பி! என்னுடன் வந்து விடுகிருயா? எங்கள் நாட்டுக்கு உன்னை அழைத்துச் செல்கிறேன். உனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்து, வேண் டிய வசதிகள் செய்து தருகிறேன்'' என்று போட்டார், ஒரு கேள்வி!

''ஓ எஸ், ஸார்! ஐ ஆஸ்க் ஃபாதர்!'' என்ருன் சடையன். அவன் தந்தைக்கு அளவற்ற மகிழ்ச்சி.

''எங்காவது என் மகன் நல்லாயிருந் தால் போதும்'' என்று வாழ்த்திஞன். உடனே ஒரு புதுச் சொக்காயும், நிஜா ரும் வாங்கி அந்தப் பையனுக்கு அளித் தார், அவருடைய காரில் ஏற்றிஞர்.

சடையன் அமெரிக்கா சென்ற சில மாதங்களுக்கெல்லாம் ஒரு கடிதம் வந் தது' அவன் தந்தை ராமனுக்கு. அவ்வப் பொழுது கொஞ்சம் பணமும் வரும்.

வருடங்கள் இருபத்தைந்து ஓடிவிட் டது. இப்பொழுது அமெரிக்காவில் நியூயார்க் நகரில் மிஸ்டர் ஸட்யான்— 'தொழிலதிபர்' என்று ஒரு போர்டு தொங்குகிறது. அது வேறு யாருமல்ல. நம்ம சடையன்தான். சொந்தத்தில் ஒரு தோல் தொழிற்சாலை. பெரிய தோட்டம், அதன் நடுவே ஓர் அழகிய மாளிகை. வாசலில் இரண்டு பெரிய கார்கள். உள்ளே சென்ருல், ஹாலில் சோபா செட்டில்; மிஸ்டர் ஸட்யான் அமர்ந்திருக்கிருர். எங்கு பார்த்தாலும் அழகழகான தோல் பொருள்கள் காட்சி யளிக்கின்றன. அவற்றின் நடுவே ஒரு முழு நல்ல பாம்புத் தோல். அதன் படத்தில் ஒரு நாமம். அதை உற்றுப் பார்க்கிருர். அவர் உடல் நடுங்குகிறது. ஏன் தெரியுமா? அவர் தந்தை அந்தப் பாம்பைப் பிடிக்க ஒரு புற்றுக்குள் கையை விட்டபொழுதுதான் அது அவ ரைத் தீண்ட, மரணம் அடைந்தார். அவர் தந்தையின் உயிரைக் குடித்த பாம்பின் தோல்தான் அது. மிகக் கஷ்டப்பட்டு அந்தத் தோலை அமெரிக்கா வுக்குக் கொண்டு வந்து சேர்த்து விட் டான். அதன் அடியில் அவன் தந்தை ராமனின் படம் மாட்டி யிருக்கிறது. அவனது இன்றைய வளமான வாழ் வுக்கு விதை ஊன்றிய தந்தையை அவன் வணங்காத நாளே இல்லை.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்

இலங்கைக் ''குடியரசு'' ஞாபகார்த்த மாக இலங்கை அஞ்சல் திணைக் களம் வெளியிட்டுள்ள புதிய வான் கடிதத்தில் இரு வேறு பொருள்படும் அமைப்பை அச்சிட்டுள்ளார்கள். (1) கடிதத்தின் விலை மதிப்பைக் குறிப்பிடப் பெரிய அள வில் 80 என்ற எண்ணும் (2) இலங்கை



யின் தலைநகரும், பிரதான இறங்குத் துறையும் அமைந்துள்ள கொழும்புநகர், பிரதான தேசாந்திர ரேகைக்குக் கிழக்கே 80 டிகிரி பாகையில் அமைந் துள்ளது என்ற பூமி சாஸ்திர ரீதியான கருத்தையும் கொண்டுள்ளது.

உலகத்தின் முடிவு

பாடப் புத்தகத்தில் பூமி உருண்டை வடிவான ஒரு கிரகம் என்றுதான் படித் திருக்கிறேம். ஆனல் அதன்முடிவு எங்கே உண்டு என்பது நமக்குத்தெரியாதுதான். ஆனலும் The world end என்று டூரிஸ்ட் களால் சொல்லப்படும் ஓர் இடம் இலங்கையில் மலை நாட்டில் அக்கரபத் தனை என்ற இடத்திலிருந்து பதினன்கு மைல் தூரத்தில் இருக்கிறது. இந்த இடத்தின் விசேஷம் என்னவென்ருல் பரந்த பீடபூமியொன்றின் ஒரு முனையில் செங்குத்தாகச் சுவர் அமைத்தது போன்று படுபயங்கரப் பள்ளத்தாக்கு ஒன்று உள்ளது. இதன் ஆழம் ஏறக் குறைய 3000 அடிகளாகும். வெளி நாட்டவரைக் கவர்ந்த உலகின் இந்த முடிவைக் கண்டு களிப்பதற்கு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் வெளிநாட்டுப் பயணிகள் அதிக அளவில் இங்கு வந்து போவார்கள்.

— கே. காயாம்பூ

தெரியுமா ?

616. தென் அமெரிக்காவில் இருக்கிறது டிட்டிகாகா என்ற ஏரி. அதன் எல்லையாக அமைந்துள்ள நாடுகள் எவை ?

617. நைஜீரியாவின் தலைநகர் எது ?

618. 'தாலமி' என்பவரைப் பற்றித் தெரியுமா ?

619. பார்த்தலோமியோ டயஸ் என்பவர் யார் ?

620. ரோஸலின்ட், சீலியா என்ற பாத்திரங்கள் ஷேக்ஸ்பியரின் எந்தப் படைப்பில் வருகின்றன ?

621. மில்லி மைக்ரான் என்ற அளவு முறையை எதற்குப் பயன்படுத்துகின்றனர் என்று தெரியுமா ?

622. கடலின் அதிக ஆழம் உத்தேசமாகக் கீழ்க்கண்டவைகளில் எதுவாக இருக்கும்? (அ) 36,000 அடிகள், (ஆ) 42,000 அடிகள், (இ) 54,000 அடிகள்.

623. க்ரப்டான், பல்லாடியம், துத்தநாகம், டெல்லூரியம் இவைகளுக்குப் பொதுவான ஒரு பெயர் உண்டு. அது என்ன ?

624. மெண்டிஃப் மலைகள் இங்கிலாந்தில் எந்த மாகாணத்தில் உள்ளன ?

625. 'இங்கிலாந்தின் தோட்டம்' என்று அழைக்கப்படுவது எந்தக் 'கௌண்டியை' (மாகாணத்தை)

626. யார்க்ஷயரின் மிகப் பெரிய நகரம் எது ?

627. டைரர் கோப்பையுடன் தொடர்புடைய விளையாட்டு எது ?

628. லெக் தியரி என்றால் என்ன ?

629. ஆஸ்திரேலியாவின் எந்தப் பகுதியில் அமெரா உள்ளது ?

630. யேர் (Yare) ஊஸ் (Ouse) ப்யூர் (Bure) என்ற நதிகள் ஓடும் நாடு எது ?

631. சாதுரியத்துக்கும் கைவேலைத் திறமைக்கும் அதி தேவதையாக கிரேக்கர்கள் எந்தக் கடவுளை வணங்கினார்கள் தெரியுமா?

632. கடல் மட்டத்தில் உள்ள ஓர் இடத்தில் ஒரு கெட்டில் நீரையும் கடல் மட்டத்துக்கு 10,000 அடிகள் உயரமான ஓர் இடத்தில் ஒரு கெட்டில் நீரையும் ஒரே சமயத்தில் கொதிக்க விட்டால் முதலில் எந்தக் கெட்டிலின் நீர் கொதி நிலையை அடையும் ?

633. டிரை ஐஸ் (Dry Ice) என்று எதற்குப் பெயர் ?

634. புவி ஈர்ப்புச் சக்தியைக் கண்ட விஞ்ஞானியின் பெயர் நினைவுக்கு வருகிறதா ?

635. ஸெரோபிடிக் (Xerophytic) தாவரம் என்றால் தெரியுமா ?

636. அகஸ்டஸ் — மார்கஸ் அரேலியஸ் என்பவர்கள் யார் ?

637. டான்யூப் நதி யுகோஸ்லாவியாவின் வழியாகவும் தேம்ஸ் நதி பெர்க்ஷயரின் வழியாகவும் ஓடுகின்றன. இது சரியா? தவறா ?

638. சூடான நீர் குளிர்ந்த நீரைவிட எடையில் கூடுதலானது இது சரியா ? தவறா ?

639. க்யூஷூ, ஷிக்கோகு தீவுகள் எங்குள்ளன ?

640. எகிப்தின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் என்ன ?

641. ஹெர்மான் டிட்டோவ் என்பவர் யார் ?

□ □ □ □ □ □ □

தெரியுமே !

விடைகள்: 616. பெருவும், பொலிவியாவும். 617. லாகோஸ். 618. இரண்டாம் நூற்றாண்டில் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த புவியியல் மேதை. 619. போர்த்துகீசிய கண்டுபிடிப்பாளர். 620. 'நீ விரும்பியபடி' - ஆஸ் யூ லைக் இட் - என்ற நாடகத்தில். 621. மிக மிக நுண்ணிய இருமிகளை அளக்க. ஒரு மில்லிமைக்ரான் என்பது ஒரு மில்லிமீட்டரை ஒரு மில்லியன் பாகமாக்கி அதில் ஒரு பாகத்தின் அளவு. 622. 36,000 அடிகள். 623. மூலப்பொருள்கள். 624. ஸாமர்செட் மாகாணத்தில். 625. கென்ட் மாகாணத்தை. 626. ஷெஃபீல்டு. 627. கால்ஃப். 628. கிரிக்கெட் ஆட்டத்தில் லெக்ஸைடைச் சேர்ந்த ஃபாஸ்ட் பௌலர் லெக் ஃபீல்டுக்குப் பௌல் பண்ணுவது லெக்தியரியாகும். 629. தென் ஆஸ்திரேலியாவில். 630. இங்கிலாந்தின் நார்ஃபோல்க் மாகாணத்தில். 631. மினர்வா. (அல்லது அதினியை) 632. 10,000 அடி உயரத்தில் உள்ள கெட்டி நீர்தான் முதலில் கொதி நிலையை அடையும். 633. உறைந்துபோன கார்பன் டையாக்ஸைடுக்கு. 634. ஸர் ஐஸக் நியூட்டன். 635. தெரியுமே - கடும் வறட்சியிலும் வாழக்கூடிய சக்தி பெற்ற தாவரங்களுக்கு இப் பெயர். 636. இருவருமே ரோமானிய சக்கரவர்த்திகள். 637. சரி. 638. தவறு. சுடுநீர் குளிர் நீரைவிட எடை குறைவானது. 639. பெயரைப் பார்த்தாலே தெரியவில்லையா? ஜப்பானில். 640. பருத்தி. 641. ரஷ்ய விண்வெளியர் - ஆஸ்ட்ரோனட். ★



'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்



உங்கள் மகளின் எதிர்கால வாழ்க்கைக்கு பொறுப்பு நீங்கள்

அவளது வருங்கால, முற்றிலும் சுகமான வாழ்க்கையை நிச்சயப்படுத்துவதற்கு இன்றே பணம் சேமிக்கத் தொடங்குங்கள்.

சேமிக்கவும் மற்றும் கரண்ட், ஸேவிங்ஸ், ஃபிக்ஸெட், ரெக்கரிங் டிபாஸிட்டுகள் ஆகிய கணக்கு தொடங்குவதற்கான எல்லாவித சௌகரியங்களையும் வழங்குகின்றோம்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை அலுவலகம் : கல்கத்தா

UCO 3/73

REGISTERED NO. M. 9040

GOKULAM, Children's Fortnightly